உ

தொண்டன்

V 5 NO.44 10th NOV 1932

உ
O5211, N28K4
N32.5.44
188979

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா மூன்று.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 5.] 1932 ஞ நவம்பர் மீ 10உ [No. 44

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 861
2. தமிழ்ப்பாடம்
நளவெண்பா - கலிதொடர்காண்டம் 863
3. குடிவாழ்க்கை (Plato's Republic)
K. இராஜகோபால் 865
4. நம்மாழ்வார் வைபவம் (4-ம் பத்து, 1-ம் தசகம்) K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L., 867
5. திருக்குறள் நீதி (பொருட்பால்).
A. இராமலிங்கம் 869
6. பொதிகைநிகண்டு (ஒரு சொற் பல்பொருட் பெயர்த் தொகுதி)
S. வையாபுரிப் பிள்ளை B.A. B.L. 870
7. இரப்பதொழித்த இறைவன்
N. R. சேஷாச்சாரி 871
8. ஜூலியஸ் ஸீஸர் (அங்கம் 5. களம் 3)
ஷேக்ஸ்பியர் நாடகம் 874
9. கம்பராமாயணம் (மாரீசன் வதைப்படலம்)
T. N. சேஷாசலம். B.A. B.L. 875
10. வர்த்தமானம் 87

கலாநிலயம்

அறிவில்லாத் திறமை 2.

இச்சைக்கே இலக்காவதின்றி அறிவிற்கு ஆதாரமாகின்றவைகளாய் நிகிலப்பொருள்கள் நினைக்கப்படுமாயின், அன்றைக்குத்தான் நாம் துன்பப் படுகுழியைக் கீழேவிட்டு நல்வாழ்வின் மலைமீதேறி மெய்யாய விடுதலையென்னும் உன்னதசிகரத்தை அடைவதற்கு வலக்காலை முன்வைத்துப் புறப்பட்டவர்களாவோம். எனின், இச்சைக்குஇயன்ற திறமையினைச் சாராமல், அவ்விச்சையில்லாவொரு அறிவினை ஆதரித்திருக்கும் வாழ்க்கையே மறுமையொடுஇம்மையிலும் முத்திநிலை முயல்கின்ற நெறியாகுமென்பதை மாந்தர் தெளிந்துகொள்ளவேண்டுவது யாதினும் முதன்மையாய் நிற்கின்றது. இவ்வுரை புதுமையன்று; பொய்தொடாத நிலைபோய் எட்டியவர் முதல், அத்தனையும் அப்படியே விழுங்கவேண்டும் என்னும் இச்சையால் அங்காந்த வாயினர்களாய் அலைந்து திரியுமொரு பொய்யே உருவெடுத்தாற்போன்ற கயமையினர்தாம் ஈறாக யாவரும் இதனையே சாத்திரமும் அனுபவமுங் காட்டிக்காட்டி ஓயாமல் எடுத்தியம்பக் கேட்டுவருகின்றோம். எனினும் என்! "கற்றதுங் கேட்டதும் அவலமாய்ப்போயிற்றன்றே" என்று இறுதியில் கழறவேண்டி நேர்கின்றது. ஆயினும் தாயுமானவர் அனைய பெரியோர் இங்ஙனம் வருந்தும்போது, தன்மையிடத்தில் பேசுகின்றனராலும் உண்மையில் அது, உலகமாந்தரின் உள்ளத்தில் விளையுமொரு கையறுநிலையைக் காட்டுகின்ற பெற்றியதன்றித் தம்முடைய தளர்ச்சியையே சாற்றுகின்ற செய்தியென எளிதில் மதித்துவிடுதல் நேரிதன்று. அகன்ற மனமுடைய பெருந்தகையினராதலின் பிறர்துயரத்தைத் தம்துயரமாகப் பாவிக்கின்றனர் அவர்.

அவாவினையும், அவாவிற்கு ஆட்செய்யும் திறமையையும் கோதெனக் கழித்து, அவைகளுக்கு மேனிமிர்ந்துநிற்பதற் குதவுவது அறிவு. இச்சை யொன்று கொண்டவிடத்து அவ்விச்சையை நிறைவேற்றுவதற்குரிய திறமைகளைப் பயிலப் புகுவதன்முன், அவ்விச்சைதான் யாதோ என்பதை உட்புகுந்து ஆராய்கின்ற நினைவும் அறிவும் வேண்டும். இச்சைக்கு இலக்காகிய ஒரு பொருளைத் தேடியடையத் தலைப்படுவதன்முன், அப்பொருளின் தன்மைதான் யாதோ என்பதைத் தேர்ந்துகொள்கின்ற நினைவும் அறிவும் வேண்டும்.

இவ் வறிவினை அடைவதெங்ஙனம்? கொள்ளுமுன்பு கொடுப்பதற்கியல்வதொன்றன்றிது. ஒருவனை நோக்கி, "மைந்த, இந்த இருப்புச் சங்கிலியை இழுத்து இழுத்து அறுத்துவிடு" என்பதற்கும், "இச்சையென்னும் ஒரு விருப்புச் சங்கிலியை அறுத்துவிடு" என்பதற்கும் பேதம் பெரிதொன்று மில்லை. இருப்புச் சங்கிலியை அறுக்கப் புகுவதன்முன் ஒருவன் எத்தனையோ உடற்பயிற்சிகள் செய்து முதிர்ந்திருக்கவேண்டுமன்றோ. இருப்புச் சங்கிலியை அறுப்பதற்கு உடற்பயிற்சி வேண்டுமாயின், விருப்புச் சங்கிலியை அறுப்பதற்கு வேண்டிய மனப்பயிற்சி அதனினும் சிறியதோ பெரியதோ என்பதைச் சிந்தித்துப்பார்க்கத்தான் வேண்டுமோ—வேண்டுவதெல்லாம் வாய்நின்று வழியும் வைராக்கியந்தானே! இதனை மறத்தலாலன்றோ மக்களிற் பெரும்பாலோர்க்கு அவர் கற்றதுங் கேட்டதும் அவலமாய்ப் போய்விடுகின்றது. ஆதலின் இச்சையில்லா அறிவிற்கு ஆதாரமாகிய பயிற்சிக்கு இயன்ற

தத்துவ ஆராய்ச்சி, வித்தகநிலை, சமயப்பற்று, கலையுணர்வு, என்னுமிந் நான்கும் மனிதனைத் திறமையினின்று திருப்பி அறிவின்பால் செலுத்தும் ஆர்வமுடையவைகளாம்.

செல்வம் சேரச்சேர இச்சையும் நிறைவேறிவிடும் என்னுமவ் வீண் எண்ணத்தைக் கால்கொண் டிழுத் தெறிந்து கொல்லவல்லது தத்துவ ஆராய்ச்சி. ஒருவனுக்கு உண்மையில்வேண்டப்படுவது எது என்பதைத் தேர்வதன்முன், வேண்டப்படாதவை எவை என்பதைத் தெளிந்து விலக்குவதற்கு, தத்துவ ஆராய்ச்சி அளப்பரிய உதவி செய்யும். கல்சரை (Culture) அடையவேண்டும் என்பதைக்காட்டிலும் செல்வத்தையடையவேண்டும் என்னும்கருத்தில் ஆயிரமடங்கு அதிகம் ஆழ்ந்தவனா யிருக்கின்றான் மனிதன். எனினும், ஒருவன் எவ்வண்ணம் இருக்கின்றான் என்பதே முக்கியமாகுமன்றி, எவ்வெவைகளை வைத்திருக்கின்றான் என்பது இன்பநிலைக்கு எள்ளளவும் பயன்படாமை நிச்சயமாயிற்றே. இதனை உணர்வதும், அவ்வுணர்வின்படி நம்முடைய வாழ்க்கைகளை நடத்துவதும் தக்க பயிற்சியால் பின்னர்க் கைகூடவேண்டியவைக ளாயினும், இவ் வுண்மையுணர்வு ஒன்றுளது என்பதையேனும் முதலில் உரிய காரணங்களுடன் தெரிந்துகொள்ளவேண்டியது மிகவும் அவசியம். அவ்வுண்மையை எடுத்து உரைப்பன சிந்தனையாளர்களாகிய சான்றோர் வரைந்துவைத்திருக்கின்ற தத்துவநூல்களாம். இவைகளை ஓதுவதால், "இச்சைக்கு நாமேன் அடிமைசெய்யவேண்டும்" என்னும் ஐயம் உதிக்கத்தலைப்படும். ஓர் ஐயத்தினின்றே தத்துவஆராய்ச்சி பிறக்கின்றது. இந்த ஆராய்ச்சியில்புகுந்த ஒருவன், சோம்பேறிச் செல்வத்திலேனும், கண்தலை தெரியாக் களியாட்டச் சுழற்சியிலேனும் அமிழ்ந்து முடியமாட்டான். சான்றோர் சிந்தித்துரைத்த தத்துவ நூல்களை ஓதுவதன் பயன் இது. எனினும், ஓயாமல் ஒருவன் புத்தகங்களைப் படித்துக்கொண்டிருப்பதே கடனாகக் கிடக்கவேண்டும் என்று நாமிங்கு வற்புறுத்தவில்லை. ஏனெனில், மற்றவருடைய கருத்துக்களே இடைவிடாமல் நம்முடைய மனத்தினுள் அடர்ந்துகொண்டிருப்பது நல்லதன்று. அவை ஒருகால் நம்முடைய கருத்துக்களைப் பிணித்துச் சிதைத்துவிடலாம். நாளடைவில் நாம், நமக்கு இயற்கையாகிய சிந்தனாசக்தியை அடியுடன் இழந்தவர்கள் ஆவதும் இயலும். ஆதலின், நாமே பலகால் சிந்தித்துத் தெரிந்துகொள்வதன்முன் ஒரு விடயத்தைப் பற்றிப் படிக்கத் துவக்குவது மிகவும் ஆபத்திற்கிடமாகின்றது. நாம் தத்துவநூல்களைப் படிக்கும்பொழுது வேறொருவனல்லனோ நமக்குப் பதிலாகச் சிந்திக்கின்றான்; பிறகு நாம் அவனுடைய சொற்களைமட்டுமே திருப்பிச் சொல்கின்றவர்களாக முடிகின்றோம். ஆதலின், நாள்முழுவதும் படிப்பதிலேயே கழிக்கின்றவன் கதி, வரவர, சிந்தனாசக்தியை இழந்து தீர்கின்றது. எனின், உலக அநுபவத்தைத் தன் சுயசிந்தனையால் ஆராய்ச்சிசெய்து உண்மைநிலையை உணர்ந்துகொள்ளப் பயில்வதே முதலிற் செய்யவேண்டிய முயற்சியாம். இது செய்தபின் இவ்வநுபவங்களைக் கொண்டு ஏனையோர் எவ்வழி சிந்தித்திருக்கின்றனர் என்பதைச் சோதிக்கப் புகுவது நன்மை பயப்பதுடன் இன்றியமையாததுமாகும். அப்பொழுதே தன் சிந்தனைகளில் இருந்தவறுகளைத் தெளிந்தறிந்து திருத்திக்கொள்ள இயலும்; அதுவுமன்றி, ஏனையோர் சிந்தனைகளில் தவறு இருக்குமாயின் அத் தவறுகளுக்கு ஆளாகாமல் காத்துக்கொள்ளவுங் கூடும். ஆதலின், தத்துவநூல்களைப் படிப்பதன்முன் தத்தம் சுய அநுபவங்களைச் சோதித்தறிதற்கு முயல்கின்ற பயிற்சி பெரிதும் வேண்டப்படுகின்றது. இதனை நினைவிற்கொண்டு புத்தகங்களின் வழியாகக் 'கல்சர்' எய்தத் தலைபட்டால்தான் நன்மைவிளையும். பெட்டிக்குள் வைத்திருப்பவைகளைக் காட்டிலும் நம் தலைக்குள் வைத்திருக்கும் விடயங்களே நம்முடைய இன்பநலங்களுக்கும் நம்முடன் வாழ்வார்தம் இன்பநலங்களுக்கும் ஆதாரமாகின்றன என்பதை ஒருபோதும் மாந்தர்என்னும் பெயரிற்குரிய ஒருவரும் மறத்தலாகாது. சுய அனுபவத்தை ஆராய்கின்ற தத்துவச்சிந்தனைகளும், அவைகளை ஆராய்ந்துரைத்திருக்கின்ற ஆன்றோர் சொற்களும், தொலையாத இச்சையின் தொடர்பினின்று நம்மை எழுப்பி, அவ்விச்சையின் அடிமையினின்று அறிவைக்காப்பாற்றவல்ல உதவிகளாகும். அப்பொழுதே, உலகப்பொருள்களைத் தத்தம் இச்சையுடன் தொடர்புபடுத்தாமல், சுயநயச் சூழ்ச்சியின்றித் தமக்கு அவை புறத்திருக்கும் பெற்றியை ஓர்ந்து அவைதம் உண்மைநிலையை மதித்துணரும் அறிவானது ஆரம்பமாகின்றது. ஒருவிடயத்தைப் பற்றி நம்முடைய நோக்கம் என்ன என்பது தத்துவத் தூய்மைக்குச் சிறிதளவேனும் வேண்டற்பாலதன்று. அவைதாம் நமக்கு அயலாக இருக்கின்ற அவ்விருக்கையிற்றானே அவைகளை நம் மனது ஏற்றுக்கொள்வது தத்துவம். அத் தத்துவத்திற்றான் திறமையின் அரவக்கொடி சாய்ந்து அறிவின் முரசக்கொடி உயர்ந்து பரக்கும்.

தத்துவ ஆராய்ச்சி இதுவாயின், இதன் முதிர்ச்சியே வித்தகநன்னிலை. இச்சையின் திறமையுடன் சாராத ஆழமுடை அறிவின் அமைதியை வித்தகம் என்றழைப்போம். கீழ்நிலைப் பிராணிகள் அறிவென்பதின்றி முற்றிலும் இச்சையே உருவாயிருக்கின்றன; மனிதரோ, பொதுவில், இச்சையின் பாகம் மிகமிக அதிகமாகவும், அறிவின்பாகம் உண்டோ இல்லையோ என்னும்படி மிக மிகக் குறைவாகவும் உடையவர்களாயிருக்கின்றனர். வித்தகர்க்கோ அறிவே அதிகம்; அவர்பால் இச்சையே உண்டோ இல்லையோ என்னும்படி அருகிக் கிடக்கின்றது. வித்தகத்தின் (Genius) இலக்கணத்தை ஷோபன்ஹார் பின்வருமாறு வகுத்துக் கூறுகின்றார்:—

Genius is simply the completest objectivity—i. e. the objective tendency of the mind...........Genius is the power of leaving one's own interests, wishes and aims entirely out of sight, of entirely renouncing one's own personality for a time, so as to remain pure knowing, subject, clear vision of the world......Therefore the experssion of genius in a face consists in this, that in it a decided predominance of knowledge over will is visible. In ordinary circumstances there is a predominant expression of will, and we see that knowledge only comes into activity under the impulse of the will, and is directed merely by motives of personal interest and advantage.

இதன்படி இச்சையினின்று விடுபட்ட அறிவானது விடயங்களை, அவைதாம் இயற்கையில் இருக்குமாறே, பார்க்கவல்லதாகின்றது. மந்திர மையைப்போன்றுமிவ் வித்தகநிலை விடயங்களின் நிரந்தரமான

உண்மைகளை உற்றுநோக்கலாம். இருண்ட மேகத்தூடுருவிவரும் சூரியகிரணங்களென்ன, விடயங்களின் தோற்றத்துள் துளைத்துச் செல்லுமிவ் வித்தகமானது உலகத்தின் உண்மை இதயத்தை நமக்கு உறஉற ஒளி செய்து காட்டுகின்றது. விடயச் சுழற்சியுள் நம்மைக் கொண்டுபோய்க் கரைத்துவிடாமல் அவைகளுக்குப் புறத்தே நம்மை நிறுத்திப் புத்திகளைப் புகட்டுகின்ற மேன்மையே வித்தகத்தின் இரகசியமாம்.

தமிழ்ப் பாடம் 44.

நள வெண்பா—கலிதொடர் காண்டம்

[845-வது பக்கத் தொடர்ச்சி]

வான நெடுவீதி செல்லு மணித்தேரோன்
தான மடந்தைக்குத் தார்வேந்தன்—போனநெறி
காட்டுவான் போலிருள்போய்க் கைவாங்கக் கானூ
டீட்டுவான் செங்கரத்தை நின்று. [டே 113.

பதப்பிரிவு:—வானம் நெடு வீதி செல்லும் மணி தேரோன் தான் அ மடந்தைக்கு தார் வேந்தன்போன நெறி காட்டுவான்போல் இருள் போய் கைவாங்க கான் ஊடே நீட்டுவான் செம் கரத்தை நின்று.

அன்வயம்:—இருள்போய்க் கைவாங்க, வானம் நெடுவீதி செல்லும் மணித்தேரோன்தான், நின்று, தார்வேந்தன் போனநெறி அம் மடந்தைக்குக் காட்டுவான்போல் கான்ஊடே செம் கரத்தை நீட்டுவான்.

பதவுரை.

இருள் - இருளானது
போய் - அகன்று
கைவாங்க - நீங்க,
வானம் - ஆகாயமாகிய
நெடு - பெரிய
வீதி - வீதியில்
செல்லும் - (நாடோறும்) போகின்ற
மணி - அழகிய
தேரோன்தான்-தேரையுடையவனாகிய சூரியன்
நின்று - (உதயகிரியில்) நின்றுகொண்டு,
தார் - மாலையை அணிந்த
வேந்தன் - நளவேந்தன்
போன - சென்ற
நெறி - வழியை
அ - அந்த
மடந்தைக்கு - பெண்ணாகிய தமயந்திக்கு
காட்டுவான்போல்-(சுட்டிக்) காட்டுகின்றவனைப் போல்
கான் ஊடே - காட்டின் நடுவே
செம் - (தன்னுடைய) சிவந்த
கரத்தை - (கிரணங்களாகிய) கைகளை
நீட்டுவான் - நீட்டினான்.

விரிவுரை:—காலையில் உதித்த கதிரவன்தன்நீண்ட கிரணங்கள் அக்காட்டினுள் பாய்ந்தது, நளன் சென்ற வழியைச் சூரியன் தமயந்திக்குச் சுட்டிக்காட்டினது போல இருந்தது, என்பது இச் செய்யுளின் கருத்து. இதுவும் தற்குறிப்பேற்ற அணி ஆகும். இயற்கையாக நிகழ்கின்ற ஒரு நிகழ்ச்சிக்குக் கவி தன் கருத்திற்கு ஏற்க ஒரு காரணம் குறிக்கவில்லையாகையால் இது ஏதுத்தற்குறிப்பேற்ற வணி யன்று. இயற்கையாய் நிகழ்கின்ற ஒரு நிகழ்ச்சிக்குக் கவி இங்கு ஒருவித பயனும் குறிக்கவில்லை; ஆகையால் பயன் தற்குறிப்பேற்ற அணியும் அன்று. மற்று, இங்குச் சூரியனது கிரணங்களை அவன் கைகள் என்று குறிக்கின்றார். இது, ஒரு பொருளை மற்றொரு பொருள் எனப் பாராட்டுவது ஆகும். ஆகையால் இது, பொருள் தற்குறிப்பேற்ற அணி. கூடிக் களித்த காதலர் உள்ளத்திருந்த உவகையெலாம் திரண்டு புறத்தே தோன்றியதெனச் சந்திரன் தோன்றினான், என்போமாகில், சந்திரன் என்னும் பொருளை அது சந்திரன் அன்று உவகையென்னும் பொருள் என்று குறிப்பதால் இதுவும் பொருள் தற்குறிப்பேற்றவணியே. "நின் முகத்தைத் தாமரை என்றே நினைக்கின்றேன்," என்பதும், முகமாகிய பொருளை முகம் என்று கொள்ளாமல் தாமரை என்னும் வேறொரு பொருளாகக் குறிப்பதால், பொருள் தற்குறிப்பேற்றவணி. ஏதுத்தற்குறிப்பு பயன் தற்குறிப்பு என்னும் வகைகளில் காண்கின்ற நிகழ்ச்சியைப்போல் இவ்வுதாரணங்களில் நிகழ்ச்சி ஒன்றும் குறிக்கப்படாமல், பொருளே ஒன்று வேறொன்றாகக் குறிக்கப்படுவதைக் கவனித்துக்கொள்ளவேண்டும்.

இனி, பொருள் தற்குறிப்பேற்றவணியை, உவமையணி யென்றேனும் உருவகவணி யென்றேனும் மயங்கவேண்டா. மதிவதனம், என்பது உவமை. வதனமதிஎன்பது உருவகம். நின் வதனத்தை யான் மதியென்றே நினைக்கின்றேன் என்பது பொருள் தற்குறிப்பேற்றம். மதிவதனம் என்னும் உவமை, மதிபோன்ற வதனம் என விரியும். வதனமதி என்னும் உருவகம் வதனமாகிய மதி என விரியும். இப்படிஇன்றி, தற்குறிப்பேற்றத்தில், வதனமன்று மதியேதானோ என்னும் குறிப்புத் தோன்றும். ஆகையால், அதுபோன்றது இது என்பது உவமையென்றும், அதுவே இது என்பது உருவகம் என்றும், அதுவன்று இது என்பது பொருள் தற்குறிப்பேற்றம் என்றும் தெரிந்துகொண்டால் அவைகளுக்குள்ள பேதத்தை எளிதில் நினைவில் வைத்துக்கொள்ளலாம்.

———

[மைக்கும்
செய்தபிழை யேதென்னுத் தேர்வேந்தே யென்ற
எய்துதுய ரக்கரைகா ணேனென்னும்—பையவே
என்னென்ன தென்னென்னு மிக்கானில் விட்டேகு
மன்னென்ன வாடு மயர்ந்து. 114.

பதப்பிரிவு:—செய்த பிழை ஏது என்னும் தேர் வேந்தே என்று அழைக்கும் எய்து துயர் அ கரை காணேன் என்னும் பையவே என் என்னது என் என்னும் இ கானில் விட்டு ஏகு மன் என்ன வாடும் அயர்ந்து.

பதவுரை.

செய்த - (என்னை நீ காட்டிலே தனியாக விட்டுப் போகத் தகுந்ததாய் நான்) செய்த
பிழை - குற்றம்
ஏது - எதுதானோ

என்னும் - என்று புலம்புவாள்.
தேர் - தேர்களை உடைய
வேந்தே - அரசனே,
என்று - என்று
அழைக்கும் - கூப்பிடுவாள்.
எய்து - நான் எய்திய
துயர் - துயரக்கடலின்
அக் கரை - மறுகரையை
காணேன் - காண இயலாதவளா யிருக்கிறேன்
என்னும் - என்று சொல்லுவாள்.
பையவே - வருத்தத்தால் மெல்ல,
என் - ஏன் என்று
என்னாது - (என்னை) கேட்காதது
என் - என்ன காரணம்
என்னும் - என்பாள்.
இ - இந்த
கானில் - காட்டில்
விட்டு - (என்னைத் தனியே) விட்டு
ஏகும் - போகின்ற
மன் - அரசனே,
என்னா - என்று
அயர்ந்து - சோர்ந்து
வாடும் - (தமயந்தி) சோர்வடைவாள்.

குறிப்பு:–'என் என்னாது என் 'என்னுமிது"என்னை அவன் ஏனென்றும் கேட்பதில்லை" என்று வழக்கத்தில்வருகின்ற வாசகத்தைத் தழுவியுள்ளது.

அல்லியந்தார் மார்ப னடித்தா மரையவடன்
நல்லுயிரு மாசையும்போ னாறுதலும்-மல்லுறுதோள்
வேந்தனே யென்னா விழுந்தாள் விழிவேலை
சாய்ந்தநீர் வெள்ளத்தே தான் 115.

பதப்பிரிவு:—அல்லி அம் தார் மார்பன் அடி தாமரை அவள்தன் நல் உயிரும் ஆசையும் போல் நாறுதலும் மல் உறு தோள் வேந்தனே என்னா விழுந்தாள் விழி வேலை சாய்ந்த நீர் வெள்ளத்தே தான்.

பதவுரை.

அல்லி - குமுதமலர்களால் கட்டிய
அம் - அழகிய
தார் - மாலையை யணிந்த
மார்பன் - மர்பையுடைய நளனது
அடி - பாதங்களாகிய
தாமரை - தாமரைகளின் சுவடு
அவள்தன் - அந்தத் தமயந்தியினுடைய
நல் - நல்ல
உயிரும் - உயிரையும்
ஆசையும் - ஆசையையும்
போல் - போல, (வருவதும் போவது மாகித் தேய்ந்து கலந்து)
நாறுதலும் - அவளுக்குத் தோன்ற,
"மல் - வலிமை
உறு - பொருந்திய
தோள் - தோள்களையுடைய
வேந்தனே - அரசனே"
என்னா - என்று
விழி - (அவளது) கண்களாகிய
வேலை - கடலிலிருந்து
சாய்ந்த - பெருகின
நீர் - நீரின்
வெள்ளத்தே - பெருக்கிலே
விழுந்தாள் - விழுந்தாள்.
(தான் - அசை)

விரிவுரை:—இருள்பிரிந்து வெளிச்சம் உண்டானதும் தமயந்திக்கு, நளனது அடிச்சுவடுகள் பாழ்மண்டபத்தின் புழுதித்தரையிலும் அதற்கருகு வெளிமண்டபத்திலும் தென்பட்டன. நாறுதல் என்ற பதத்திற்கு மணம்வீசுதல் என்னும் பொருள் தவிர,தோன்றுதல் அல்லது விளங்குதல் என்னும் அர்த்தமும் உண்டு. இங்கு அச்சொல் 'தோன்றுதல்' என்னும் பொருளில் தான் வந்திருக்கின்றது.,நளனுடைய அடிச்சுவடுகள் அவள்கண்களிற்பட்டன. தென்பட்ட அவ் வடிச்சுவடுகள் தமயந்திக்கு, அவளுடைய உயிரும் ஆசையும் போலவே தோன்றின, ஆதலால் அவள் 'ஐயகோ அரசனே' என்று அழுது விழுந்தனள், என்று சொல்கின்றார் புகழேந்தி. எந்த விதத்தில் அவ் வடிச்சுவடுகள் அவளது உயிரும் ஆசையும் போல் இருந்தன வென்பதையும், அவைகளைக் காண அவள் விழுந்து அழுவானேன் என்பதையும் உணர்ந்தாலன்றி இப் பாட்டின் அழகை அனுபவிக்க இயலாது.

நளன் இவளைவிட்டுநேராகப்போய்விடவில்லை."ஒருகால் மீளும், புகுந்து ஒருகால் மீண்டு ஏகும்,' ஆதலால் அடிச்சுவடுகளும் சிறிது தூரம் மண்டபத்தைவிட்டு அகன்று போகின்றவைகளாகவும் பிறகு அவை திரும்பி மண்டபத்தை நெருங்கி வருவனவாகவும் இருந்திருக்கும். அவ்வாறு போகின்ற அடிச்சுவடுகளை அவள் பின்பற்றித் தொடரும்போது தன்னைவிட்டு அவன் போயே போய்விடுகின்றானே என்ற துயரக்கவற்சியால் அவளுக்குத் தன்னுடைய உயிரே போவதுபோன்ற உணர்ச்சி உண்டாயிற்று. பிறகு, அவ்வடிச்சுவடுகள் திரும்பிவருகின்ற குறியைக் கண்டவுடன், "எனது நாயகன் போய்விடவில்லை. இங்குத்தான் எங்கேயோ சென்று வந்துளான்; ஆகையால்அவனை நான் காணலாகும்" என்னும் ஆசை வந்திருக்கும். எனவே நளன் போன குறி தோன்றியபோது தமயந்தியின் உயிர் போவதுபோலவும், அவன் வந்த குறி தோன்றியபோது அவளுக்கு ஆசை வருவது போலவும் அவ்வடிச்சுவடுகள் அமைந்திருந்தன. எனவே, "(அவ்வடிச் சுவடுகள்) அவள்தன் நல் உயிரும் ஆசையும்போல்—போவதும் வருவதுமாய்—தோன்றுதலும்" எனச் சில சொற்கள் வருவித்து நிரனிறையாகப் பொருள்கொள்ள வேண்டும்.

இனி, முன்சொன்ன கருத்தோடுகூட இன்னொரு பொருளும் சேர்த்துக்கொள்ளலாம். அது—"தமயந்தியின் உயிரும் ஆசையும் கலந்து அழிந்திருப்பது போலவே, பலமுறை வருவதும் போவதுமாயிருந்த அவ்வடிச்சுவடுகள் கலந்து அழிந்திருக்கக் கண்டாள்" என்பதாம்.

இப்படிப் பலமுறை அகல்வதும் நெருங்குவதுமாயிருந்த அவ் வடிச்சுவடுகளைக் கண்ணுற்ற தமயந்தி, தன்னைவிட்டுப் போவதற்கு எளிதில் நளன் உடன்படாமல் "ஆயர் கொணர்ந்த அடுபாலில் தோயல் கடைவார்தம் கைபோலும்" அவன்மனம் தவித்தவொரு தன்மையை உணர்ந்துகொண்டாள். உணரவே, தன்பாலுள்ள அன்பினால் விட்டேகிய நளன் ஏகுங்கால் பிரியத்தரியாமல் பட்டதோர் கொடுந்துயரை நினைத்து அவனுக்கு இரங்கி, "மன்னாவோ, என்னைப் பிரிந்தகல

நீ என்ன பாடுதான் பட்டாயோ" வென்று அழலாயினாள்.

குறிப்பு:—ஆகு பெயர்களின் இலக்கணமும், அவைகளின் விதங்களிற் சிலவற்றையும் முன்பல இடங்களில் சொல்லியிருக்கின்றோம் (46, 426, 463, 565, 584 வது பக்கங்கள்). நளனது தாமரைபோன்ற அடிகள் தென்பட்டன என்றிருப்பதில், அடி என்பது பாதம் என்னும் அர்த்தத்தில் வரவில்லை. தமயந்தி பார்த்தது நளனுடைய பாதங்களை அன்று. பாதங்கள் பட்டதால் உண்டான சுவடுகளையே பார்த்தாள். ஆதலால், அடி என்னும் சொல், அதனால் உண்டான சுவட்டிற்கு ஆகி நிற்கின்றது. எனவே இது ஆகுபெயர். சுவட்டிற்குக் காரணமாயிருந்தது கால். எனின் காரணமாயிருந்த பாதம் என்னும் பொருளின் பெயர் அதனால் விளைந்த காரியமாகிய சுவட்டின் பெயராக இங்கு நிற்கின்றது. இப்படிக் காரணத்தின் பெயர் காரியத்திற்கு ஆகுமானால் அதற்குக் காரண ஆகுபெயர் என்பது பெயர். பொருளாகுபெயர், குணவாகு பெயர், சினையாகு பெயர், இடவாகு பெயர், உவமையாகு பெயர், முதலிய ஆகுபெயர்களைப் பற்றிச் சொல்லியிருக்கின்றோம். அவைகளோடு இந்தக் காரண ஆகுபெயரையும் சேர்த்துக்கொள்ளவும்.

வெறித்த விளமான்காள் மென்மயில்கா ளிந்த
நெறிக்க ணெடிதூழி வாழ்வீர்—பிறித்தெம்மைப்
போனாரைக் காட்டுதிரோ வென்னாப் புலம்பினாள்
வானாடர் பெற்றிலா மான். 116.

பதப்பிரிவு:—வெறித்த இள மான்காள் மெல் மயில்காள் இந்த நெறிக்கண் நெடிது ஊழி வாழ்வீர் பிறித்து எம்மை போனாரை காட்டுதிரோ என்னா புலம்பினாள் வான் நாடர் பெற்று இலா மான்.

அன்வயம்:—வான்நாடர் பெற்று இலா மான், "வெறித்த இளமான்காள், மென் மயில்காள், நெடிது ஊழி வாழ்வீர், எம்மைப் பிறித்து இந்த நெறிக்கண் போனாரைக் காட்டுதிரோ" என்னாப் புலம்பினாள்.

பதவுரை.

வான்நாடர் - தேவலோகத்திலிருக்கின்ற இந்திரன் முதலாயினோரும்
பெற்று இலா - அடைய முடியாத
மான் - மான்போன்ற தமயந்தி,
"வெறித்த - மருண்ட
இள - இளமையான
மான்காள் - மான்களே,
மெல் - மெல்லிய
மயில்காள் - மயில்களே,
நெடிது - நீண்ட
ஊழி - ஊழிக்காலம்
வாழ்வீர் - வாழ்வீர்களாக,
எம்மை - நம்மை
பிறித்து - வேறாக விட்டு
இந்த - இந்த
நெறிக்கண் - வழியில்
போனாரை - போனவரை
காட்டுதிரோ - உங்களால் காட்ட இயலுமோ"
என்னா - என்று
புலம்பினாள் - அழுதாள்.

விரிவுரை:—குழல்விரி கோலமாய் அழுது உழல்வாளைக்கண்ட மான் மயில் முதலியன அவள்பால் வந்து சூழ்ந்துகொண்டு இரங்கிநிற்கவே தமயந்தி, துயரத் தொடர்பினால் அவைகளோடு உறவுபாராட்டி, "எம்மைப் பிறித்துப் போனாரை' என்று சேர்த்துச் சொல்கின்றாள். 'எம்மை' என்பது இங்கு 'நம்மை' என்னும் உளப்பாட்டுத் தன்மைப் பன்மைப் பொருளது. மான்காள், மயில்காள், இந்த நெறிக்கண்....." என்று கேட்கவந்த இவள், அவை தன்பால் காட்டும் பரிவைக்கண்டுமனமுருகி, "நெடிதூழி வாழ்வீர்" என இடையே அவைகளை வாழ்த்தி "பிறித்தெம்மைப் போனாரைக் காட்டுதிரோ" என மேல்தொடர்ந்து கூறுகின்றாள். காட்டுதிரோ, என்பதிலுள்ள, ஓகாரம் வினாப் பொருளில் வந்திருக்கின்றது. காட்டுங்கள் என்று இரக்கப்பொருளில் ஓ சேர்ந்துவந்ததாகவும், அப்படிக் காட்டுவீர்களானால் நெடிதூழி வாழ்ந்திருப்பீர், என்று தமயந்தி கூறியதாகவும் கொள்ளாமல், கைம்மாறொன்றும் கருதாமலே அன்புப்பெருக்கினால் அவள் அவைகளை வாழ்த்தினாள் என்று கருதுவதே தமயந்தியின் தன்மைக்குத் தக்கதாகும்.

குடி வாழ்க்கை

[Plato's Republic]

[850-வது பக்கத் தொடர்ச்சி]

தத்துவக் கலையறிவுபெற்ற நல்லோர் ஓச்சிய செங்கோலின் பயனாக நன்னிலையில் நிலைத்திருந்த வொரு நாட்டின் அரசியல்முறையும், மக்களின் வாழ்வும் சீர்குலைந்துபோவானேன் என்று நீங்கள் என்னைக் கேட்கலாம். நாடாள்வோரிடை ஏற்படுகின்ற மாறுபடு முரண்களினால் அரசாங்கமுறை சீர்குலையலாகின்றது, என்ற விடை பொருந்தும். ஆயினும், இப்பிரிவினைக்குக் காரணம் யாதென்று மீண்டுங் கேட்டால், "கலைத்தெய்வங்காள்நீங்களேபாடுங்கள்"என்றஹோமர்மகாகவிவேண்டியதுபோல், நாமும், இக்கேள்விக்கு விடையொன்று அருளுமாறு தெய்வங்களை வேண்டிக்கொள்வதன்றி வேறுவழியில்லை. எனினும், தெய்வங்கள் தாம் என்ன சொல்வார்கள்? மானுட வஸ்துக்கள் (Human Things) சாச்வதமானவைகள் அல்லவாதலின் ஒரு நாள் அவை அழியவேண்டியவைகளே, என்று ஒருகால் அவர்கள் கூறலாம். நன்னிலையி லிருக்கும் எந்நாடும் இவ் விதியினிடைப் படாதிருப்பதற் கியல்வதில்லை. சுழல்கின்ற விதியின் சக்கரம் மேலிருப்பனவற்றைக் கீழே கொண்டுவந்துதான் தீர்கின்றது.

நிற்க, பிராணி உலகத்திலும் தாவர உலகத்திலும், இக்காலத்தில் இது முளைக்கும் காய்க்கும், இக்காலத்தில் இது சூல்கொள்ளும் குட்டிபோடும், என்னும் ஓர் நிர்ணயம் இருக்கின்றது. மனிதருடைய புத்தியோ புலன்களால் இயக்கப்படுவதனால் காலமல்லாக் காலத்தில் மக்களைப்பெற்றுவிடுகின்றார். நாம் நன்னிலையிழத்தற்கு இதுவொரு முக்கியமான காரணம். இன்ன

படி காலமல்லாக் காலத்தில் பெறப்படும் சந்ததியின் மனவளம் குறைகின்றது. மனவளம் குன்றியவர் காப்பாளர்களாக வரவே, நாடு தன்னிலை குலைந்துவிடாமல் என் செய்யும். நாட்டின் அங்கங்களான நான்கு ஜாதியினரும் நிலைதடுமாறி விவகரிக்கையில், தங்கம் வெள்ளி என்னும் அவ்விரு இனத்தவரான முதல் இரண்டு ஜாதியாருக்கும், பித்தளை இரும்பு இனத்தவரான கடையிரண்டு ஜாதியாருக்கும் போட்டி யேற்பட்டு, அதனால் நாடு இருவேறு வழிகளில் இழுக்கப்பெறுகின்றது. கடைசியில் இவ் விருவேறு பிரிவினரும் மத்தியஸ்தமான வொருமுடிவைச் செய்துகொள்கின்றனர். இந்த ஒப்பந்த ஏற்பாட்டின்படி பொருள் மிக உடையவனுக்கே செல்வாக்கு ஏற்படுகின்றது. முன்னினத்தவர்கள் தாந்தாம் காப்பாளர்கள் என்று பெருமை யெய்துகின்றனர். பின்னினத்தவர் 'செல்வம் தமக்குண்டு; அச்செல்வத்தின் வன்மையால் அரசியலும் செல்வாக்குந் தமக்கே உரியது' என்று இறுமாப்பு அடைகின்றனர். எனவே இருவரும் சேர்ந்து 'இவ்வளவுபொருளுடையவன்தான் நாட்டின் அரசியலில் அதிகார உரிமை பெறக்கூடியவன்' என்று வரையறுத்தனர். அந்த ஏற்பாடுதான் கைப்பொருளிற்குச் செல்வாக்கைத் தந்து முதன்முதலாக நாட்டின் நலத்தைக் கெடுத்தது. [அந்த ஏற்பாட்டை ஆங்கிலத்தில் டிமாக்ரஸி (Timocracy) என்பர்] சொத்தும் அந்தஸ்தும் செய்துகொண்ட ஏற்பாட்டில், போட்டியும் சுயநயமும் வளரவளர இறுதியில் சொத்தின் வன்மையே தலைதூக்க வாரம்பித்தது. இதனால் மனிதன் பொருள்சேமிக்கும் வியாபாரமுயற்சியில் முற்படலானன். இவ் வியாபார நாகரிகத்தின்முன், கல்வியும் மானுட நற்குணங்களும் அகலவேண்டியவைகளே. பின், தத்துவக்கலைக்கு இவ்வேற்பாட்டில் இடமேது?

ஓரோவழி ஒரு மேன்மையோன் எவ்விடத்தேனும் இருந்தாலும் அவன் சந்ததி அந்நிலையிலிருப்பதில்லை. ஏனெனில்,தாயோ பிள்ளையைக் கெடுத்துவிடுகின்றாள். அரசியலிற் கலவாமல் தன்கணவன் தத்துவ உணர்விற்குரிய தனிமையை நாடிச் செல்வதால் அவளது அந்தஸ்து குறைந்துவிடுகின்றதைக் கண்டு பிள்ளையை அழைத்து 'அப்பா, உன் தகப்பனார் சுயநலமுடையவர், தனிமை தனிமை என்று முழுச் சோம்பலில் காலங் கழிக்கின்றார். நீயும் உன் தகப்பனைப்போலிருக்கக் கூடாது?' என்கின்றாள். இத்தகைய சிறு எண்ணங்கள் இளைஞர்மனதில் வேரூன்றவே மாந்தர் படிப்படியாக இழிவடைகின்றனர்.

இப்படி, அந்தஸ்தும் வீரமும் உடைய முதல் இரு இனத்தாரும், பொருள்படைத்ததால் உயர்ந்துபோன கடையிரு இனத்தாரும் செய்துகொண்ட ஏற்பாட்டில்,மெல்லமெல்ல, பொருளுடைமை முதல்ஸ்தானம் பெற்று, அந்தஸ்தையும் வீரத்தையும் தன்னிடம் விட்டுப் பெயரச் செய்துவிடவே, செல்வமுடைய சிலரது ஆட்சிமுறை இரண்டாவதாக ஏற்பட்டது. [இதை ஆலிகார்க்கி Oligarchy என்பார்கள்] இந்த ஏற்பாட்டில், பொருள்சேமிக்கும் போட்டியே வாழ்க்கையாக, குலம் கல்வி பெருந்தகைமை ஆகிய நலனெல்லாம் மடிகின்றன. எஞ்சுவன, ஆடம்பரமும், ஏழை பணக்காரன் என்ற பொல்லாப் பிரிவுந்தான்.

இப்பிரிவினில், இன்று ஒருவன் தனது ஆடம்பரத்தால் சொத்தை இழந்துவிடுகின்றான். நேற்று ஏழையாயிருந்தவன் இன்று செல்வம் சேமித்துவிடுகின்றான். ஏழையானவனுக்குப் புதுப் பணக்காரன்மீது வன்மம் ஏற்படுகின்றது. இவ்வன்மம் வளர்ந்து சண்டையிலும் குழப்பத்திலும் முடிகின்றது. இக்குழப்பத்தில் ஏழையானோர் பெறுகின்ற வெற்றியில் ஜனநாயகம் (Democracy) என்று அழைக்கப்படும் ஒரு ஆட்சிமுறை உருப்பெறுகின்றது. இம்முறையின்படி ஏழை பணக்காரன் என்ற வேற்றுமையில்லாமல் அரசாங்கத்தில் அந்தஸ்தைப் பெற இயல்கின்றது. எவனுக்கும் எதையும் செய்ய உரிமையுண்டு. எல்லோரும் எல்லாம் ஆகிவிடலாம். இது சொல்வதற்குச் சுவையாகத்தா னிருக்கின்றதெனினும் இம்முறையினில் சீரிய கல்வி சீர்குலைகின்றது. கல்விக்கும் அறிவிற்கும் பதிலாக, தேசபக்தி (Patriotism) என்பதுதான் ஒரு மனிதனது உபயோகத்தை நிர்ணயிக்கும் கருவியாகின்றது. தேசபக்தியின் ஆட்சியில் கல்விக்கு இடமில்லை. கல்வி குலம் குணம் என்பவைகளுக்குப் பதிலாகத் தேசபக்தி யிருந்தாற்போதும் என்று மாந்தர் எண்ணத் தலைப்படுகின்றனர். சிற்றினத்தவனேயாயினும் ஒருவன், தான் தேசபக்தி யுடையவன் என்று தன்னை விளம்பிக்கொள்வானாயின், அவன், எல்லா அறிவும் பெற்றவனாக மதிக்கப்படுகின்றான். இதுதான் ஜனநாயகம். மனிதனுக்கு மனிதன் வேற்றுமையில்லை. எல்லாரும் எல்லாமும் ஆகலாம். நாளைக்குச் சிறைச்சாலைக் குரியவனாய் நிற்கின்ற ஒரு குற்றவாளியும், தெருவிலே இன்று உரிமையுடன் தலை தூக்கி நடக்கலாம். கழுதையும் தன் சுதந்திர ஞாபகத்தோடு தலைநிமிர்ந்து நடக்கும். கழுதை குதிரை மனிதன் நல்லவன் முட்டாள் எல்லோரும் ஒன்றே—இது ஜனநாயகம். இறுதியில் இம்முறை', போட்டி கட்சி கயமை, மானமிலாமை, கோபம், கொடுமை ஆகிய தீமைகளை வளர்த்து, மனிதனைக் காட்டுமிருகங்களின் நிலைமைக்குக் கொண்டுபோய் வீழ்த்திவிடுகின்றது.

செல்வமுடையவனைக்கண்டு அஃதில்லாதவன் கொள்ளும் பொருமையில் முளைக்கின்ற இந்த ஜனநாயகத்தின் வளர்ச்சி கொடுங்கோன்மையில் முடிகின்றது. இது இயற்கையே. இது எப்படியென்று சிறிது ஆய்ந்து பார்ப்போம். ஜனநாயக ஆட்சி முதன்முதலில் மனிதனிடத்தில் பொருள்சேமிக்கும் எண்ணத்தை வளர்த்தது. சேமிக்கும் முயற்சியில் உலோபகுணத்திற்குத்தான் இடமுண்டு. ஆகவே, ஜனநாயக ஆரம்பத்தில் மனிதன் உலோபியானன். உலோபியோ பொருளைக் காக்குமொரு பேய். அதைச் செலவுசெய்யமாட்டான். எனவே அவன்சிக்கனமும்நிதானமுங்கொண்டு ஆடம்பர மில்லாமல் வாழ்க்கையை நடத்திவந்தான். அவனது மகனோ செல்வத்தின் ஞாபகத்தில் வளர்கின்றான். பொருள்தேடும் வேலை அம்மகனுக்கு இல்லை. எனவே அவன் மனம் சிற்றின்ப நுகர்ச்சிகளுக்குள் மெல்ல மெல்ல இழுக்கப்பெறுகின்றது. களியாட்ட வாழ்க்கைக்குச் சிற்றினத்தவரின் சேர்க்கை அவசியம். சிற்றினத்தவர் இச்சகம்பாடி வந்து அவனைச் சூழ்ந்துகொள்கின்றனர். இத்தகைய சேர்க்கையுடையவனுக்கு நல்ல தன்மை எப்படி யேற்படும். அக்களிமகனும் ஒரு நாள் தகப்பன் ஆகின்றான். தகப்பனது குணங்களைத் தனது பிறப்புரிமையாகக் கொண்டு தோன்றியுள்ள அவன் மகன் களியாட்ட ஆடம்பரங்களில் இன்னும் சிறிது ஆழ்ந்துவிடுகின்றான். கள் காம மாதிய தூர்க்குணங்களும் அவனைச் சார்கின்றன. காமவலையிலும்,

குடியின்பழக்கத்திலும் வீழ்ந்தவன் கடைத்தேறுவது இயல்வதொன்றன்று. அவன் பித்தனேபோல் தன்னிலை யிழந்துவிடுகின்றான். இத்தகையவனுக்குப் பிறக்கின்ற பிள்ளைகள் இன்னும் இழிந்துபோகவேண்டியதுதா னன்றோ? இன்னபடியே வாழையடி வாழையாகச் சந்ததி வளர்கின்றது. வளர்கின்ற சந்ததியார் தங்கள் களியாட்டங்களுக்குரிய செல்வம் தேய்ந்து தேய்ந்துகுறையப் பின் எந்தவழியிலும் தமக்குவேண்டிய பொருளைத் தேடிக்கொள்ளலாம் என்னும் எண்ணம் உடையவராகின்றனர். இந்தக் கொள்கையைத் தொடர்ந்து இச்சகம்பாடலும் வஞ்சனை புரிதலும், கொள்ளையடித்தலும் அனையசெயல்கள் நிரந்தரதர்மங்களாகின்றன. இறுதியில் குழப்பமே வழக்காகின்றது.

இந்நிலையில் நல்வாழ்க்கைக்கும், சிந்தனைக்கும், வித்தகத்திற்கும் இடமேது. இல்லாதவன் இருப்பவனைச் சுற்றிக்கொண்டு இச்சகம் பாடியோ, மோசம்செய்தோ பொருள்தேட முயல்கின்றான். இச்சகம் பாடுவோனுக்கு இச்சகம்பாடச் சிலர் வேண்டாவா? அன்னதற்குப் பொருள்வேண்டும். ஒருவன் தன்னிலும் அதிகப் பணமுடையவனைச் சேர்கின்றான். அவன் இன்னும் ஒரு பெரிய செல்வனைச் சேர்க்கின்றான். தன் நலத்திற்கெனச் செய்துகொள்ளும் காரியங்களெல்லாம் நியாயமாகின்றன. பணத்திலும் செல்வாக்கிலும் பெருத்த ஒரு தனிமகன் ஒரு கூட்டத்தாருக்குத் தலைவனாகின்றான். அவனையொத்த பலர் மற்றுமோர் பெரிய செல்வனை நாடி அவனது அடிமைகளாகின்றார். இறுதியில் கெட்டிக்காரன் ஒருவன் எல்லோரையும் அடிமைப்படுத்துகின்றான். இதுதான் கொடுமைக்கிடமாகிய வொரு அரசாட்சியின் வரன்முறை. பொதுநலம் சுதந்தரம் என்று முழங்கிய ஜனநாயகம், சந்தோஷமும் சுதந்தரமும் அற்ற அடிமைகளையே வளர்ப்பதற் காதாரமாகின்றது. எனவே ஒன்று சொல்கின்றேன். கூர்ந்து கேட்டு இவ்வாசகத்தை முழங்குங்கள். அரிஸ்டன் (Ariston) என்னும் ஒரு பேரறிஞர் கூறுகின்றார்:—

"நீதியையும் நன்மையையும் வாழ்க்கையின் முக்கியமான அம்சங்களாகக் கொண்டு வாழும் பெருமகனே மனிதஇனத்தில் அதிகமான சந்தோஷத்தையும் சுதந்தரத்தையும் உடையவன். சிற்றினமும் களியாட்டப்பொருள்களும் சந்தோஷத்தைத் தரா. தன்னை யடக்கியாள்பவனே சுதந்தரம் பெற்றவன். நியாயத்திலும் நன்மையிலும் பயிலும் வாழ்க்கையுடையவனே தன்னை யடக்கியாளும் அரசன். மற்றவர்கள் தமக்கும் தம் நாட்டிற்கும் கேட்டைச் சூழ்கின்ற அடிமைகளே யாவர். அவர்களுக்குச் சந்தோஷமென்பதே இல்லை."

இப்பொன்னுரையை ஏற்று வாழ்தலே வாழ்க்கை. இதனை எத்தனைமுறை வேண்டுமெனினும் கூற நான் பின்வாங்கமாட்டேன் நல்வாழ்க்கையின் வித்து இது.

(தொடரும்)

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

[847-வது பக்கத் தொடர்ச்சி]

4-ம் பத்து 1-ம் தசகம்.

5-ம் பாசுரம்.

பணிமின் றிருவரு ளென்னுமஞ்
சீதப்பைம் பூம்பள்ளி
யணிமென் குழலா ரின்பக்
கலவி யமுதுண்டார்
துணிமுன்பு நாலப்பல் லேழையர்
தாமிழிப்பச் செல்வர்
மணிமின்னு மேனிநம் மாயவன்
பேர்சொல்லி வாழ்மினே.

உரை:—அம் - அழகிய, சீத - சீதளமான, பைம்-பசுமையான, பூம்பள்ளி - பூக்களால் ஏற்படுத்தப்பட்ட படுக்கையில் கிடந்து, திருவருள் - நான் தொண்டு செய்யும் நிமித்தம் கிருபையை, பணிமின் - அருளிச் செய்யுங்கோள், என்னும் - என்று சொல்லுபவரான, அணி-ஆடை யாபரணங்க ளணிந்த, மென் குழலார் - மிருதுவான கூந்தலையுடைய விலைமாதர்களுடைய, இன்பக்கலவி அமுதுஉண்டார் - சேர்க்கையை ரஸமாய் அநுபவித்த ரஸிகர்கள், துணி முன்பு நால - தாம் உடுக்கும் ஆடை பின்பக்கத்திற்கு எட்டாததினால் முன்பே கொஞ்சம் தொங்கிநிற்க, பல்-பல, ஏழையர் தாம் - ஆண்மக்களை வசப்படுத்தும் நிமித்தம் தாங்களே அவர்களைக் கெஞ்சி அவர்களிடத்தில் மோஹம் வைத்தவர்ாயிருந்த மாதர்கள் தாமே, இழிப்ப - தற்காலம் இவர்கள் ஏழையாய்ப் போன நிமித்தம், பிற புருஷர்களின் ஆதரவில் ஆச்ரிதமாயிருக்கின்ற இப்பெண்டிர்கள் இவர்களைக் கண்ணெடுத்தும் பாராதே உபேக்ஷைசெய்ய, செல்வர் - முன் இவ் விலைமாதர்களிடத்துக் கலவிசெய்த ஆசையின் வலையில்அகப்பட்டு அவர்களை அணுகிப்போவார்கள். மணி மின்னும் - இந்திரநீல மணிபோல் மின்னுகிற்கிற, மேனி - திருமேனியையுடைய, நம் மாயவன்-நம்முடைய ஆச்சரியமான பகவானது, பேர்சொல்லி வாழ்மினோ - திருநாமங்களைச் சொல்லி வணங்கி வாழுங்கோள். உண்மையில் திருநாமங்களைப் பயின்றால் ஒருக்காலும் அவன் கைவிடான்.

விசேஷக் குறிப்பு:—ஆழ்வார், இப் பாசுரத்தில், விலைமாதர்களிடத்தில் பரிதாபத்தால், "ஐயோ, இவர்கள் மனிதர்களைத் தம் வயமாக்க அவர்களிடத்தில் உள்ளபடியே ஆசைவைத்து மோஹிப்பித்துப் பிறகு அம்மனிதர்கள் பொருள் இழக்கவே, பொருளுக்காக மற்றும் வேறு சிலமனிதர்களை வசியப்படுத்திப் பிடிக்க வேண்டிநேர்கின்றது" என்றுவிசனப்பட்டு"ஏழையர்" என்று கூறுகிறார். ஒரு விலைமாதைப்பற்றிக் கூறாமல் விலைமாதர் வகுப்பைப்பற்றிக் கூறுவதால் "பல் ஏழையர்" என்கிறார். விலைமாதர் புருடர்களைத் தம் வயப்படுத்த நடிக்கும் விநயத்தையும் பின் அவர் பொருள் போகவே இவர் காட்டும் இகழ்ச்சியும், இவர் வலையில் அகப்பட்டவன் பிறகு தன் செல்வம் இழந்து இவர்களிடத்தில் உள்ள சபலத்தால் அவ்விகழ்ச்சியையும் பாராட்டாமல் அவரை அணுகும் விதத்தையும் யாவும் தம்முடைய அநுபவத்தால் அறிந்தவர்போல நம் ஆழ்வார் வர்ணிப்பது வியக்கத் தக்கது. 8-வது பாசுரத்தில் ராஜரீக சபையை வர்ணித்திருப்பது இக்

கவியின் சிறப்பை நன்கு உணர்த்துகிறது என்று முன்பே கூறியுள்ளோம்.

6-ம் பாசுரம்.

[மாய்ந்துமாய்ந் வாழ்ந்தார்கள் வாழ்ந்தது மாமழை மொக்கலின்
தாழ்ந்தா ரென்றல்லா லன்று முதலின் றறுதியாய்
வாழ்ந்தார் வாழ்ந்தே நிற்ப ரென்பதில்லை நிற்குறி
லாழ்ந்தார் கடற்பள்ளி யண்ண லடியவ ராமினே.

பதக்குறிப்புக்கள்:-மொக்கல் - மழைத்துளி, மாய்ந்து மாய்ந்து - நசித்து நசித்து, ஆழ்ந்தார்-பாபங்களாலே பீடிக்கப்பட்டுத் தாழ்ந்தவர்கள் (ஒரு சன்மத்தில் செய்யும் தீச்செயல் அடுத்த ஜன்மத்தில் இன்னம் தீச்செயலில் முட்டித் தாழ்த்தும். இப்படிச்சிற்சிலஜன்மங்கள் கழியவே பாபங்களில் ஆழம் கால்கடந்துபோமென்பது தாத்பரியம்). ஆழ்ந்தார் கடல் - ஆழ்ந்து - ஆழமாய், ஆர் - விசாலமான, கடல் - பாற்கடல்.

பொழிப்புரை:—"ஐசுவரியத்தைப் பெற்று வாழ்ந்தார் ஒருவருமில்லையோ வென்னில்—வாழ்ந்தார்கள் வாழ்ந்ததும் மாரிபெய்யும்போழ்து மழைத்துளிபோல் வெகு அல்பகாலம் வாழ்ந்து நசித்துப்போனவர் தாம் எத்தனை? பண்டு வாழ்ந்தவர்கள் தாங்கள் வாழப்புக்க வன்றுமுத லின்றறுதியாக வாழ்ந்தே நிற்கக் கண்டிலோம். ஆனபின்பு நித்திய சித்தமான ஐசுவரியத்தை வேண்டினால், உலகங்களின் இரக்ஷணத்திற்காகவந்து திருப்பாற் கடலிலே கண்வளர்ந்தருளுகின்ற பரமபுருஷன் திருவடிகளிலே அடிமை செய்கையாகிற நித்திய விலித்த ஐசுவரியத்தைப் பற்றுங்கோள் என்கிறார்"—ஆறுயிரப்படி.

7-ம் பாசுரம்.

ஆமின் சுவையவை யாறோ டடிசிலுண் டார்ந்தபின்
தூமென் மொழிமட வாரிரக்கப் பின்னும் துற்றுவார்
ஈமி னெனக்கொரு துற்றென் றிடறுவ ராதலிற்
கோமின் றுழாய்முடி யாதியஞ் சோதி குணங்களே.

பதவுரை:—ஆம் - தகுந்தது ஆகும், இன்சுவை - அவை ஆறோடு—இனிய அறுசுவைகளுடனும், அடிசில் - சோறு, உண்டு ஆர்ந்த பின் - சாப்பிட்டுக்களைதீர்ந்தபின், தூ - பரிசுத்தமான, மென்மொழி - பிரியமான வார்த்தைகளால் சம்பாஷணை செய்யும், மடவார்-பிரியமான மனைவி, இரக்க - வேண்ட, பின்னும் துற்றுவர் - எனக்காக ஒரு கவளம் இந்த நல்ல அடிசிலில் ஒரு துற்று நீர் அமுதுசெய்யவேண்டுமென்று தூண்டவே பசியா திருந்தாலும் சாப்பிடுகிற பிரியபர்த்தாக்கள், எனக்கொரு துற்று - எனக்கு ஒரு வாய்ச்சோறு, ஈமின் என்று - எனக்குப் பசியாயிருக்கிறது கொடுங்கோள் என்று, இடறுவர் - ஒரு வீட்டு ஆடவரை கேட்க அவர் இல்லை எனவும் மற்றொரு வீட்டுக்குச் சென்று யாசிக்க அங்குமில்லை என்னவே, பசியாலும் மனவருத்தத்தாலும் வீடுகளின் வாயிற்படி தடுக்க இடறி விழுவார்கள், ஆதலின் - ஆதலால், துழாய் முடி யாதியஞ் சோதி - திருத்துழாய் மாலையைத் தரித்த ஆதி பராக்கிரமசாலியும் ஜகத் ரக்ஷகனும் பக்தர்களை நல்வழிக்கு உய்க்கும் மஹாகுணங்களையுடையவனுமான பெருமான், குணங்களை-பரம ஒளதாரியம்முதலானநற்குணங்களை, கோமின்-ஒன்று ஒன்றாய் நினைத்தும் எல்லாம் சேர்த்து நினைத்தும் துதி செய்யுங்கோள்.

8-ம் பாசுரம்.

குணங்கொ ணிறைபுகழ் மன்னர்
கொடைக்கடன் பூண்டிருந்
திணங்கி யுலகுட னாக்கிலு
மாங்கவனை யில்லா
மணங்கொண்ட போகத்து மன்னியும்
மீள்வார்கள் மீள்வில்லை
பணங்கொ ளரவணை யான்திரு
நாமம் படிமினே

குறிப்புக்கள்:-குணங்கொள் நிறைபுகழ் - நற்குணங்கள் பொருந்தினவனுதல்பற்றி எல்லாராலும் புகழப்பெற்ற நற்குணங்களாகிய தயை, பொறுமை, சாந்தி, இரக்கம், அரசநீதியில் ஊக்கம், காத்தளிக்கும் நிர்வாஹம் முதலியன உடைய, மன்னர்-ராஜாக்கள், கொடைக்கடன்-பிறர்க்குப் பொருள்கொடையே தம் ஐசுவரியத்துக்குப்பயனென்று, பூண்டிருந்து-தீர்மானித்து ராஜ்ஜியபாரம் செய்து, உலகுடன் ஆக்கிலும் - ஜனங்களைத் தன்வச மாக்கிலும், ஆங்கு-அவ்வண்ணம் ஐசுவரியம் அனுபவிப்பதில், அவனை இல்லா - ஈசனின் அநுக்கிரக மில்லாமல், மணம் கொண்ட - நல்லதான, போகத்து - ராஜ்ஜியானுபவத்தில், மன்னுர்—நிலைபெறுர். மன்னியும் - அவ்வண்ணம் கொஞ்சகாலம் நிலைபெற்றாலும், மீள்வார்கள் - அவர்களே திருபதராய் நிவர்த்திபெற்றுத் தமது ராஜ்ஜியாநுபவத்திலிருந்தும் நீங்குவார்கள். ஆகையால், பணங்கொள்-ஆயிரம் படங்களாகிற தலைகளையுடைய, அரவு-ஆதிசேஷனை, அணையான்-படுக்கையாகக் கொண்டு பள்ளிகொள்ளும் நாராயணன், பாதங்கள் படிமினோ - பாதங்களை ஸேவியுங்கோள். இப்படி அவனடி சேர்ந்தால், மீள்வில்லை-திரும்பி ஜென்மம் எடுத்துத் துயர்படுவோம் என்ற பயம் இல்லை. ஆதிசேஷனை எடுத்துக் கூறியது - பகவான் ஸ்ரீமந் நாராயணன் தன்னை ஆச்ரயித்த ஆதிசேஷனை எப்படி விடுவதில்லையோ அப்படி மற்றைய பக்தர்களையும் கைவிடாரென்று உபமானம் காட்டுதல் நிமித்தம். சர்வ புகழும் தானுதி நற்குணங்களும் நிறைந்த ராஜாக்கள் ஆண்டு ஸுகம்பெறவில்லையோ, அப்பேர்பட்ட உலக வாழ்க்கையை விரும்பலாகாதோ என்ன? அதற்கு—அவ்வண்ணம் ராஜாக்கள் ஆண்டதும் ஈசன் அருள் கொண்டல்லவோ; அவர்களும் அந்த ஸுகாநுபவத்திலிருந்தும் மீளக்கண்டோமல்லவோ என்று உபதேசம் கூறுகின்றார்.

—*—

அறிக்கை:—கலா நிலயத்தில் மதிப்புரை வரைவதற்குப் புத்தகம் அனுப்புவார் ரூ. 10 கட்டணம் செலுத்த வேண்டும். அப்பொழுதே புத்தகத்தின் குணங்களையும் குற்றங்களையும் ஆய்ந்து எழுதுவோம். இல்லையேல் புத்தகத்தின் வரவுமாத்திரம் குறிக்கப்படும்.

திருக்குறள் நீதி

2. பொருட்பால்

அரசியல்

[834-வது பக்கத் தொடர்ச்சி]

1. இறைமாட்சி

1. அரணமைச் சாறு மரசாங்க மாகும்.
2. திருவூக்க மறிவீகை அரசற் கருங்குணம்.
3. துணிவுகல்வி தூங்காமை அணியா மிறைக்கு.
4. நெறிமுறை நின்று ரரசரு ளேறு.
5. காத்து வகுப்பவன் காவல னாவான்.
6. காணவெளிய னின்சொலனைப் பேணுமா முலகு.
7. இன்சொ லுட னீயுமிறை தன்சொலே யுலகு.
8. முறைசெய்து காப்போனை இறையென்னு முலகு.
9. அமைச்சிடித் துரைக்கப் பொறுப்பவ னரசு.
10. கொடையளி குடிகோ ளுடையா னரசு.

2. கல்வி

1. கற்றபி னிற்க வதற்குத் தகவே.
2. எண்ணு மெழுத்துங் கண்ணெனத் தகும்.
3. கண்ணுடையர் கற்றோர் புண்ணுடையர் மற்றோர்.
4. கலைவல் லானைப் புலவனும் விரும்பும்.
5. கல்வியில் லாதவர் கடைய ராவார்.
6. கற்றத் தனையே பெற்றநல் லறிவு.
7. கல்லா மாந்தர் நல்மர மொப்பர்.
8. ஒருமையுட் கல்வி யெழுமைக்கு முறுதுணை.
9. உலக முவத்தலே கலைவலோர் கருத்து.
10. அழியாச் செல்வ மருங்கலை யாகும்.

3. கல்லாமை

1. கல்வியில் லான்சொல் செல்லா தவைக்கண்.
2. கல்லாதான் சொல்லை யெல்லாரு மெள்ளுவர்.
3. கல்லாரும் நல்லாரே சொல்லா திருப்பின்.
4. கல்லாதான் சொன்னயங் கொள்வரோ புலவர்.
5. கல்லான் பெருமிதஞ் சொல்லாற் சிதையும்.
6. கல்லாத மாந்தர் களர்நில மொப்பர்.
7. கல்லா வொருவனைக் கற்சிலை யென்பர்.
8. கல்லாதா னாக்கத்தின் நல்லான் மிடிநன்று.
9. படிப்பில் லாதவன் குடிப்பிறந் தாலென்.
10. கல்வியே யல்லாற் செல்வம்வே றில்லை.

4. கேள்வி

1. செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மாகும்.
2. செவிக்குண வற்றால் வயிற்றுக் குணவிடு.
3. கேள்விச் செல்வரே தேவப் பிறப்பு.
4. கல்லா னாயினும் நல்லதாங் கேள்வி.
5. உறுதிநூற் கேள்வி யூன்றுகோ லாகும்.
6. சிறிதெனிற் கேள்வி அதுவுமே யூதியம்.
7. பழுதறக் கேட்டோர் பயனில சொல்லார்.
8. செவிகொடாக் கேள்வியர் செவிட ராவர்.
9. நுணங்கிய கேள்வியே வணங்கிய வாய்தரும்.
10. செவியிற் சுவையற்றார் புவியிற் பிறந்தென்.

5. அறிவுடைமை

1. பகைவனை வெல்லும் படையறி வாகும்.
2. மனத்தூய்மை பண்ணு மினத்தினு மறிவு.
3. எப்பொரு ளாயினு மெய்ப்பொரு ளறிவு.
4. எளிதுரைத் தரிதின் னுணர்வதா மறிவு.
5. குவிதலும் விரிதலுங் குற்றமற்றார்க் கில்லை.
6. உலகோ டொட்ட வொழுகுத லறிவு.
7. ஆவ தறிவா ரருங்கலை வினோதர்.
8. அஞ்சுவ தஞ்சா ரறிவற்ற மாந்தர்.
9. நோய்க்கிடங் கொடாத பாக்கிய மறிவு.
10. அறிவே யல்லால் பொருள்பிற இல்லை.

6. குற்றங் கடிதல்

1. செருக்குச் சினமற்ற பெருக்கமே பெருமிதம்.
2. மானமத முவகை ஏதமா மிறைக்கு.
3. தினையள வேதம் பனையா மிறைக்கு.
4. ஏதங் காப்பின் சேத மில்லை.
5. தன்குற்றம் நீக்குவார்க் கென்குற்ற மாகும்.
6. வருமுன் காவான் எரிமுன் வைக்கோல்.
7. செயற்பால செய்யா னுயர்ப்பால னல்லன்.
8. உலோபத்தை யொத்த ஏதமொன் றில்லை.
9. வியவற்க தன்னை நயவற்க தீய.
10. ஏதிலா ரறியாக் காதலைத் துய்க்க.

7. பெரியாரைத் துணைக்கோடல்

1. அறன்வழி நின்றோ ருறவு வேண்டும்.
2. அருநோய் தீர்க்கும் பெரியாரை மேவுக.
3. பெருந்தகையா ருறவு அருந்துணை யாகும்.
4. பெரியார் கேண்மை வலிமை யுடைத்து.
5. வாய்த்தந லறிஞரை யாய்ந்துகொ ளமைச்சாய்.
6. நல்லோர் உறவினன் பொல்லாங்கிற் காளாகான்.
7. இடிக்குந் துணையாரை யடுக்கிற் பகையின்று.
8. இடித்துரைப் போனிலான் முடித்தலை சாயும்.
9. கற்றவர் துணையிலாக் கொற்றவன் நிலைகெடும்.
10. கற்றோரைக் கைவிட்ட கொற்றவன் பேதை.

8. சிற்றினஞ்சேராமை

1. சிறியோ ருறவு பெரியோர் பேணார்.
2. சேர்க்கைத் திறமே யார்க்குமா மறிவு.
3. குணத்தின் தன்மை இனத்தாற் றெரியும்.
4. மனத்ததாய்க் காட்டி யினத்ததாஞ் செய்கை.
5. செயலுஞ் சொல்லுஞ் சேர்க்கையின் பாலே.
6. இனத்தூய்மை யுடையார்க் கெல்லாம் நன்றாம்.
7. மனநல மினநலங் கனநலந் தருமே.
8. மனநலத் துறுதி யினநலஞ் செய்யும்.
9. மனத்தூய்மை யுடையார்க் கினத்தூய்மை யுண்டாம்.
10. நல்லின மல்லது அல்லற் படுத்தும்.

9. தெரிந்து செயல்வகை

1. அழிவது மாவது மாய்ந்துசெய் கருமம்,
2. ஆய்ந்துசெய் வார்க்கோ அரியதொன் றில்லை.
3. முதல்கெடுந் தொழிலை விதமறிந்தார் செய்யார்.
4. தெளியாது செய்யாரே யிளிவஞ் சுபவர்.
5. வகையறத் தேரான் பகைவரை வெல்லான்.
6. செயத்தகா செய்யற்க செய்தக்க செய்க.
7. எண்ணித் துணிந்தபி னெண்ணுவ திழுக்கு.
8. ஆய்ந்து செயாவினை தோய்ந்திடுங் குற்றம்.

9. குணமறிந்து செய்யின் குற்றமனு காது.
10. எள்ளா வினைசெயின் தள்ளா தலகு.

10. வலியறிதல்

1. துணைவலி தன்வலி தூக்கிவினை செய்க.
2. ஒல்வ தறிந்து செல்லுக வினைமேல்.
3. ஓர்ந்து செய்யாதார் சோர்ந்து முறிவர்.
4. தன்னையுணரா வரசன் தானே கெடுவான்.
5. பலமுடை யோமெனப் பலருடன் பொரற்க.
6. நுனிக்கொம் பேறுவா னுயிர்க்கிறுதி நாடுவான்.
7. அளவறிந் தீவார்க்குப் பொருள்குறை யாது.
8. ஒறுப்பன வின்றேல் ஊதியம் பெருகா.
9. அளவறியான்வாழ்க்கை உளதாகிக்கேடடையும்.
10. அளவறி யான்பொரு ளதிசீக் கிரங்கெடும்.

11. காலமறிதல்.

1. கால மறிந்து மேல்வினை செய்க.
2, பருவத்தே செய்வானைத் திருவிட்டு நீங்காள்.
3. கருவியுங் காலமு மருவினை முடிக்கும்.
4. காலமு மிடமும் ஞாலங் கூட்டும்.
5. காலங் கருதின் ஞாலம் பெறலாம்.
6. வலியா ளொடுக்கங் கெலியா நிற்கும்.
7. பகைமேற் செல்லான் பருவங் காப்போன்.
8. காலமறிந்து வெல்வோர் கோபந்தனைக் காட்டார்.
9. வெல்காலங் கண்டக்கால் மல்லாட வேண்டும்.
10. கொக்கொத் திருந்ததன் குத்தொக்கச் செய்க.

12. இடனறிதல்.

1. தொடங்கற்க ஒன்று மிடங்கண்ட பின்னலால்.
2. முரண்வலி யார்க்கு மாண்வலி நன்று.
3. இடனறிந்து செய்யின் திடஞ்சிறியர் வெல்வர்.
4. அரண்வலி யார்முன் முரண்வலி நில்லா.
5. திரையில் வெல்லுமுதலை கரையில்வெல்லா தெதையும்
6. கடலோடா விரதம் திடலோடா நாவாய்.
7. திடனோடு இடமறிந்தா னுடனுறும் வெற்றி.
8. சிறுபடை யாயினு மிடமறிந்து வெல்க.
9. குறைவலி யார்க்கு முறைவிடம் வலிது.
10. கரியைக் களர்நிலத்தே நரிவெல்லுங் கண்டாய்.

பொதிகை நிகண்டு

[855-வது பக்கத் தொடர்ச்சி]

பாசனமுண் கலன்பாண்டஞ் சுற்றமென மூன்றும்
பச்சைமர கதம்புதன்மா லோர்செடிதோ லம்பேர்
கோசமுட்டை முறைகுறிபண் டாரமதி லுறுப்பாங்
குணிசெச்சை யாடுவெட்சி தேய்வையுமுப் பேராந்
தூசுகலை புரசைதூ சிப்படை முப் பேராஞ்
சொற்றிடும்வச் சிரங்குலிசங் கள்ளிவயி ரமுமாம்
பேசுநொச்சி யூர்சிந்து வாரமதி லாகும்
பின்வசுப்பொன் வசுக்களான் கன்றனல்வஞ் சியரே.

சகர வேதுகை முற்றும்.

ஞகர வெதுகை

வஞ்சிகொடி மரம்பாவூர் மேற்செலவு பெண்ணும்
வஞ்சம்வாள் கபடமுமாம் பஞ்சமிடி யைந்தாம்
இஞ்சிமதி லாத்திரமா நெஞ்சுமன மார்பாம்
எஞ்சல்குறை விழைத்தலுமாங் கஞ்சிகஞ்சி யூராங்
குஞ்சிகுன்றி சேய்மயிர்புட் பார்ப்பொடுநாற் பேராங்
குஞ்சமீ யோட்டிதொங்கல் குறளைகுன்றி படியாங்
கஞ்சனமே கரிக்குருவி கண்ணுடி யிரண்டாங்
கஞ்சனயன் கன்னனட் டுவன்கஞ்ச னுமே. 374.

கஞ்சமரை தாளமப்பங் கஞ்சாவெண் கலமாங்
கஞ்சிகையே யிடுதிரைவத் திரஞ்சிவிகை யாகும்
அஞ்சலிவவ் வாற்றொழலாம் வஞ்சனைபொய் சூரா
மஞ்சனமை கறுப்பொடுநீக் கானையிலொன் றுகு
மஞ்சரியே பூங்கொத்து மாலைதளி ராகு
மஞ்சுபூண் வனப்புவலி முகில்யானை முதுகாந்
துஞ்சல்வலி நிலைபேறு துயில்சோம்பு சாவுந்
துஞ்சியிருப் பதுமாறுங் கிஞ்சுகவா யணங்கே. 375.

கிஞ்சுகமென் பதுமுருக்கு முதலைசிவப் பாகுங்
கிளர்காஞ்சி மேகலையூர் மரமெதிருன் றலுமாம்
முஞ்சுதலென் பதுசாவு மொய்த்திடலு மாகு
மொழிகாஞ்சி லென்பதுவே கலப்பைமதி லுறுப்பாம்
பஞ்சரம்வாட் கோரைபுள்ளின் கூடுசெருந் தியுமாம்
படுங்களுறல் பொலிவுகுன்ற லெழுச்சியென லாகுந்
தஞ்சமெனு மொழிபற்றுக் கோடெளிமை யாதீஞ்
சாற்றுமஞர் துயரறிவி லோராமிவ் விடத்தே. 376.

ஞகர வேதுகை முற்றும்.

டகர வெதுகை

இடம்வாமம் பொருளிடமாஞ் சடமுடல்பொய் யாரு
மிடபமரக் கொம்பெருதா முடிமகுடந் தலையாங்
குடமூர்தற் கரைகும்ப மால்கூத்துப் பசுவாங்
குடிஞையே கூகைபுள்ளின் பொதுநதிமுப் பெயராந்
தடமலை விசாலஞ்சீர் சுனையடிகோண் பெரிதாந்
தடிவயல்வில் லூனுடும்பு தண்டுலக்கை மின்னுந்
திடநிடமும் பெலமுமாம் விடநஞ்சு தேளாஞ்
செடிசிதைவு கான்பாவங் குணமின்மை கடனே. 377.

கடம்வழிகான் குடங்கயிறு கடனீதி முழவு
கரிக்கதுப்பு மதமானைத் திரளுடல்பன் னொன்றும்
படமுடுக்கை கொடிபாம்பின் படங்கோலக் கிளியாம்
படர்நினைப்பு நடைதுயரம் வீரர்நாற் பேராம்
மடமுனியிற் பேதமையாங் குடைகவிகை குடைவாம்
மடலுலா மடற்பூவி னிதழ்பனையே டாகும்
நடலைபொய்வஞ் சனைநுடக்காம் வடமுழுக்கால் கயிறும்
நடைவழியே யொழுக்கநடை செல்வமாங் கொடியே.

கொடிமுபூ சங்கதுப்பாம் படிறுபொய்யே களவாங்
கொடிதுவசங் காக்கைவில்லாங் குடிகுலமூர் நுதலா
மடிவயின்சோம் புடைதாழை மடங்குதல்சா வறுபேர்
மடைசோறுங் கடைப்பூணும் புனனம்படையு மாகுந்
தொடிவளைகி லொருபலமாம் படிவமோன் புருவாந்
துடியேலங் காலநுட்பம் பறைமுப்பே ராகும்
வெடிபுகையே யிடிவெடித்தல் வெளிபயமைம் பேராம்
விடர்கமர்கான் முளியிருப்புத் தூர்த்தர்மலை விடவே.

விடைவிடலே றெதிர்மொழியாங் கிடைகிடப்புக் குழு
[வாம்
விடங்கமேர் கொடிகொடுங்கை படங்குகொடி வானி
கடைமுடிவங் காடியிடம் வாயில்கடை தலுமாங்
கடிகைதுண்ட நாளிகையோர் குலங்கதலிற் றூழாம்

படைகலனை யாயுதங்கண் படைசேனை யலமாம்
படுவிகுளங் கள்விற்பாள் நொடிபிதிர்வார்த் தையுமாம்
அடையிலைசும் மாடடுத்தல் கணம்வழியப் பமுமாம்
அடர்நெருக்கம் போர்தகடாந் துடர்மாலை துடர்பே.

துடைவைகொலை யுழவின்பே ரடல்கொலைபோர் வலியாந்
தொடுமெருதந் தோட்டமுமாங் குடுமியுச்சி மலையாங்
கடகமதில் வளைசேனை கரித்திரள்வட் டமுமாங்
கடுவிடமுட் கசப்பரீ தகியுநாற் பேராம்
படிபகைபார் நிகர்குணஞ்சோ பானமங்க வடியும்
பாரமும்வா யிற்படியும் படிவுநா ழியுமாஞ்
சடிலமே சடைகுதிரை செறிவுநெருக் கமுமாஞ்
சடைவேணி வேராகுந் தொடைதார்நாண் வடமே.381.

வடகமுல்லா சந்தோலாம் விடலைமன்ன னுடைவாம்
வடுச்சேம்பு தழும்புவண்டா முடுக்கைதுடி யிடையாஞ்
சுடிகையுச்சி முடியணியாம் வடுகிசையாழ்த் திறமாஞ்
சுடரொளிமுக் கதிராகும் பிடிகமையம் வளையாம்
படலிகையோர் மணிவட்டம் பீர்க்குப்பூந் தட்டாம்
படலைபரி மணிமாலை படாவொருகட் பறையாங்
கடிவடிவு விரைவுவையங் கூர்மைபேய் விளக்கங்
காலமணம் பயங்காப்புப் புதுமைமீங் கிடலே. 382.

இடைநிறையே நடுமெருங்கு விடமுநாற் பேரா [யூராம்.
மிடக்கர்மறைச் சொற்குடமாம் படப்பைகொல்லை
படுதலொலி சொலல்பூத்த லின்மையுண்டா தலுமாம்
படுமரத்தின் குலைகள்ளு நீர்நிலைகண் மையின் பேர்
அடிமுதல்கால் செண்டுவெளி யடிமைகவிப் பதமா
மடுப்பொருநா ளடுத்தலச்ச மடுப்பொடுநாற் பேராம்
வடவைபிடி யெருமைதீத் திரள்பரிப்பெட் டையுமா
மடங்கலுக மிமனிடி தீச் சிங்கநோய்ப் பாடே. 383.

பாடுபக்கம் படுதலொலி பெருமைவாய் பாடாம்
பாடிபா சறையூரா நாடிகன்னல் நரம்பா
மாடுபுடை செல்வப்பே ராடுவெற்றி தகரா
மாடமனை யுழுந்தின்பேர் வாடைதெருக் காற்றுங்
கோடிகமே பூந்தட்டுஞ் சீலையுமா யிருபேர்
குடம்பைமுட்டை கூடாகு முடன்றல்சினம்போராஞ்
சேடுநன்மை பெருமையே யழகுதிரட் சியுமாஞ்
சேடனோர் குலமனந்தன் பாங்கனுங்கூ டியவே. 384.

கூடமனை மலையுச்சி கவடுசெம்மட் டியுமாங்
கோடுவளை வயிர்குவடு கரைமருப்புக் கொப்பாம்
ஓடைநீர் நிலைக்கிடங்கோர் மரம்பட்டங் கொடியாம்
உடுவிண்மீன் கிடங்குமரக் கலவிசியம் பீர்க்கா
மீடுவமை குழைவுவலி பெருமைநாற் பேராம்
இடங்கர்குடந் தூர்த்தர்சிறு வழிமுதலை நாறபேர்
பீடிகையா சனபீட மாவணந்தட் டாகும்
பெட்டலிச்சை சேறலுமா நட்டநடங் கேடே. 385.

கேடகமே யூர்பலகை பரிசைமூன் றுகுங்
கிடுகுதேர் மரச்சுற்றுங் கேடகஞ்சட் டமுமாம்
கோடைகாந் துகங்குதிரை மேல்காற்று மாகுங்
கோடரம்வா னரஞ்சோலை குதிரைமரக் கொம்பர்
மோடுமே டுதரமதாஞ் சேடியூர் சகியா
முடங்கல்வேய் முடங்குதனோய் தாழைநாற் பேராம்
ஆடியுத்தி ராடமா தங்கண்ணு டியுமாம்
ஆடல்கூ டுதல்வென்றி கூத்தெனுஞ்சா டுரையே. 386.

சாடிகோ ளுரைதாழி சீலையுமுப் பேராஞ்
சட்டிபக்கம் விசளையுமாங் கட்டிவெல்லஞ் சுகமாம்
கோடிபுதி தெண்கலைப்பே ராடகம்பொன் றுவரை
கோடகமே முடியுறுப்புக் குதிரைபுது மையுமாம்
பாடலம்பா திரிதுரகஞ் சிவப்புமுப்பே ராகும்
பட்டுநகர் சீலையின்பேர் வெட்சிபுதல் புறமாந்
தோடுபனை மடல்கூட்ட மலரிதழ்கா தணியாந்
தோட்டிகத வோடுகரித் துரோட்டியுங்கட் டினரே.

கட்டளையே நிறையறித லுரையறித லொப்பாங்
கடவுள்முனி தெய்வமொடு நன்மையென மூன்றாந்
தொட்டலே தொடுதல்தோண் டுதல்கைநீண் டலுமாஞ்
சுட்டல்குறி சுடுதலின்பேர் மட்டளவு கள்ளாம்
நட்டலே நடுதலொடு நட்பியற்றுந் தொழிலாம்
நாட்டம்விழி பண்வாளா மோட்டமிதழ் தோல்வாந்
தட்டைகிளி கடிகோல்வேய் தினைத்தாள்முண் டமுமாஞ்
சட்டமே பலகைபள்ளி கிடுகென விட்டனரே. 388.

இட்டிகைசெய் திடலாணி யிட்டிகுந்த மகமாம்
இடியுறுதிச் சொல்லிடிநென் மாவிடித்த லுற்பேர்
குட்டநோய் குளங்குறிதாம் பெட்பாசை பெரிதாங்
குட்டன்மகன் மறிபிணியாங் குட்டிமகள் பறழாம்
பட்டிகையே கச்சிரதம் பணைதெப்ப நாற்பேர்
பட்டமே பதவிவழி சவரிசேக் கையின்பேர்
கொட்டமத மொருமருந்தாஞ் செட்டிசெட்டி குகனுங்
கோட்டங்கோண் படப்பை கொட்டில் கோயில்சும்மை
[தட்டே.

தட்டகடு கேடகந்தேர் நடுத்தட்டுத் தடையாந்
தட்டல்தடை கிட்டலுமாம் பட்டிகுக்க லூராம்
முட்டெனுஞ்சொ லிடையூறு சந்தெல்லா மாகு
முடலைவலி பெருமைதிரட் சியுமெனப்பேர் மூன்றாங்
கட்டலே தடைகளைதல் பந்தித்தல் களவாங்
கடுத்தலெனுஞ் சொல்லைய மொப்புவே கமுமாம்
புட்கரம்வான் பாண்டமுகம் வான்குருகம் புயநீர்
புழைக்கைநுனி நிறைவுதீர்த் தம்பருந்தாய் நாட்டே.

நாட்டியங்கூத் தெண்ணமுமா ஞாட்பமர்பா ரமுமா
நல்லபுட்டம் புடவையே நிறைவுகாக் கையுமாம்
கோட்டியுமை யவள்பிரமை சவைமுப்பே ராகும்
கூறுதிட்டை திண்ணையுரல் மேட்டின்பே ராகும்
வேட்டுவனென் பதுமகநாட் புழுவேடன் மூன்றும்
வியன்வட்டங் கலையூர்கோள் பரிசைவட்டர் தாழ்வாம்
பாட்டிதாய் தந்தையையீன் றாள்விலங்கிற் பெண்ணும்
பருங்கிட்டி யோரீற்றுத் தரளமா மணியே. 391.

டகர வேதுகை முற்றும்.

இரப்பதொழித்த இறைவன்

பாண்டி நாட்டிலே சோமசுந்தரப் பெருமான் அறுபத்து நான்கு திருவிளையாடல்களைப் புரிந்த வொரு புகலரிய புனிதம்வாய்ந்த மதுரையம்பதியிலே பண்டைக்காலத்திலே சௌந்தர பாண்டியன் என்பான் செங்கோ லோச்சிவந்தான். அவனுடைய அருமைக் குமாரனுகிய உக்கிரகுமார பாண்டியன் மநுநீதி பிறழாமல் மாநிலம் புரக்குங்காலத்தில் நவக்கிரகங்களின் வக்கிர கதியால் மழையே யில்லாமல் எங்கும் வறட்சியே யேற்பட்டுவிட்டது. தாவரவர்க்கங்கள் தீய்ந்து கருகின. ஜங்கம வர்க்கங்கள் உலர்ந்து உருமாறின. ஏரி குளங் குட்டை கிணறுகளில் ஒரு துளி நீருமின்றி வறண்டு ஆதிசேடன் சிரம் தெரிவதேபோல் பிளவுற்றன. இப் பாண்டிநாட்டில் மட்டுமின்றிப் பக்கத்திலுள்ள சேர சோழ நாடுகளிலும் இப்பெரும் பஞ்சம் காட்டுத் தீப்போல் பரவிவிட்டது.

கன்றுகாலிக ளெல்லாம் நாவறட்சியுற்றுக் கதறின. மானிடர்களோ குடிநீரு மற்று, கொப்பளிக்கத் தண்ணீரு மற்று, ஐயே[illegible] கண்ணீரு

மற்றுக் களைத்தனர். இக் கண்ணராவியைக் கண்டுமக் கதிரவன் கடுகளவும் கருணையின்றித் தன் வெய்யகொடுங்கிரணங்களைச் செவ்வனே வீசிப் பரப்பி முந்நாட்டு மக்களையும் சுட்டுப் பொசுக்கலாயினன். காலன் கைப்பட்ட உயிரும், கட்செவியின் வாய்ப்பட்ட தேரையும், நெருப்பினிடைப்பட்ட பஞ்சும், பஞ்சத்தினிடைப்பட்ட ஜீவராசிகளும் தப்ப முடியுமோ? குடிகளுடைய நடையுடை பாவனை ஆகார வியவாகாரங்களெல்லாம் தாறுமாறாயின. உலோபிகள், தாம் நெடுநாளாய் எதிர்பார்த்திருந்த பஞ்சம் வந்ததும் தோள்தட்டிக்கொக்கரித்து அவரவர் சேர்த்து வைத்திருந்த தானியங்களை ஒரு பொன்மணிக் கொரு தானிய மணியாக விற்பதேபோன்று அகவிலைக்குவிற்று அகங்களித்தனர். மக்கள் கையிலிருந்த பணமெல்லாம் தீர்ந்தது; பின்வயிற்றுப்பாட்டுக்கென்செய்வது? முன்னர் ஆவின் பாலுண்டவர் அன்னப் பாலுக்கும், அன்னப்பாலுண்டவர் ஆற்றுநீருக்கும், ஆற்றுநீருண்டவர் ஆகாச நீருக்கும் ஆர்வமுற்று அவதிப்பட்டனர். நெய்யுண்பார் புல்லையும், புல்லுண்பார் காய்ந்த சருகுமுதல் கந்தமூலங்களையும் தேடித்திரிந்தனர். அநேகர் தமக்குரிய நகைநட்டுக்களையும் சிலர் துணி மணிகளையும் பலர் பாத்திரம் பண்டங்களையும் மற்றையோர் நீர்நிலங்களையும் ஒன்றுக்குப் பாதியாய் விற்று வயிறுவளர்க்கலாயினர். அந்தோ பரிதாபம்! தவமாய்த் தவங்கிடந்து தரையின் மீது அன்னமுண்டு தீர்த்தயாத்திரைகள் பல செய்து பெற்றுவளர்த்த அருமைப் பாலகர்களையும் விற்று வயிறுதூர்க்கத் தொடங்கினரென்றால் அந்த க்ஷாம காலத்தின் க்ஷேமத்தைக் கூறவும் வேண்டுமோ?

இவ்விதம் பஞ்சம்விஞ்சிக் கஞ்சிக்கலையும் அலங்கோலத்தைக் கண்ட முவ்வரசர்களும் மனக்கலக்கம் மிகக் கொண்டு ஒடுங்கினர். "இக் கொடிய கருப்பை யொழிப்ப தெப்படி? நமது பிரஜைகளின் ஏக்கத்தை நீக்கி ஆக்கம் அளிப்ப தெப்படி?" என்று சேயின் நோய் கண்டு அகங்கரையும் ஆவேபோல் அகங்குழைந்தனர். மறுபடியும் "பலப்பல யோசிப்பதில் ,பயன் என்ன! இடுக்கணுற்ற யாவரும் நல்லோரைக்கண்டு அவர்தம் நலமிக்க சொற்கேட்டு அதன்படி நடத்தலே நன்று" என்று தீர்மானித்து, பொதியமலைச் சாரலில் எழுந்தருளியிருக்கும் அகத்தியமா முனிவரை நாடிச் சாஷ்டாங்கமாய்த் தண்டன் ஸமர்ப்பித்துத் தாம் நாடிவந்த விஷயத்தை விண்ணப்பித்துக்கொண்டனர். அப்பெரியார், "வேந்தர்காள், நவக்கிரகங்களின் நிலை தாறுமாறாய்க்கிடப்பதால் பன்னிரண்டு வருஷகாலம் மழையேயில்லாமல் பூமண்டலம் முழுதும் தத்தளிக்கும். ஆதலால் நீவிர் மழைக்குரிய தெய்வமாவான் தேவேந்திரன்பாற் சென்று வணங்குமின். நுமது கோரிக்கை நிறைவேறும்" என்று ஆலோசனை கூறி யனுப்பினர். "பெரியீர், வாஸவன்வதிகின்ற அவ்வானுலகுக்கு நரர்களாகிய அடியேங்கள் எப்படிச் செல்ல வியலும்" என்று மும்மன்னரும் வினவ அதற்குக் குறுமுனிவர், "ஸோமவார விரதத்தை அநுஷ்டித்து வெள்ளிமன்றவ னருளைப்பெற்று ஆகாயமார்க்கமாகச் செல்லுங்கள்" என்றுரைத்து அந்நோன்பின் விதியையும் அவர்களுக்கு உபதேசித்தருளினர்.

முவ்வேந்தரும் அவணின்று நீங்கிப் பொற்றாமரைக் கயத்தில் மூழ்கிச் சுந்தரேசனை ஆராதித்து வரம்பெற்றுப் பரம பரிசுத்தராய் வானிடையெழுந்து இந்திரனது இருக்கையையடைந்தனர். இவ்வாறு சேர சோழ பாண்டியர்கள் தன்னிடம்வருதலையறிந்த தேவர்கோன் தான் வீற்றிருக்கும் சிங்காதனத்திற்குச் சிறிது கீழ்ப்படுமாறு அமைத்திருந்த அழகிய ஆதனங்களில் அமருமாறு அவ்வேந்தர்களை ஆக்ஞாபித்தனன். சென்னியும் சூட்டுவனும் அங்ஙனமே அமர்ந்தனர். ஆனால் உக்கிரவழுதிமாத்திரம் அவ்விதம் அமராமல் அமரர்கோன் அரியாதனத்தின் மீதேறி அன்னவனோடொப்ப அமர்ந்தான். அதைக் கண்ட அமரேசன் அழுக்காறுற்றுப் பஞ்சவனோடு பேசாமல், கோழிக்கோன் சூட்டுவர்களுடைய க்ஷேமலாபங்களை மாத்திரம் விசாரித்தான். அவர்கள், "அமரரேறே, பல்லாண்டுகளாக எங்களுடைய நாடு மழைவள மின்றி மங்குகின்றது. தாங்கள்தான் அப்பெருங்குறையை நீக்கியருளவேணும். இதுவே எங்கள் வேண்டுகோள்" என்று எடுத்துக்கூறினர். உடனே மேகவாகனன், "நன்று' உங்களுடைய நாட்டில் நீர்வளம் செழிக்கும்படி மழைபெய்யச்செய்வாம்; கவலையொழிமின்" என்றருளிப் பின், சித்திரவேலைப்பாடமைந்த ஆடையாபரணங்களை அவர்களுக்குவெகுமதியாகவழங்கி வழிவிட்டனுப்பினன். பிறகு ஆயிரங்கண்ணுடையான், பாண்டியன் தனது சிங்காதனத்திற் றன்னோடொப்பத் தருக்கோடிருக்கின்றதையும், நீர்வளம் வேண்டுமென்று கேளாதிருப்பதையுங் கண்டு அவன் செருக்கை யடக்க ஒரு சூழ்ச்சி கருதி உடனே அவனுக்கு வெகுமானஞ் செய்வான்போல் பெரும் பாரமாயும், அணிந்தவுடனே உடலை நெரித்து உயிர்வாங்கத் தக்கதாயும் பாண்டியனது குன்றுகளன்ன புஜபலத்தை யொடுக்கும்படியானதாயு முள்ள ஒரு அணிகலத்தை யெடுத்து அவன் கழுத்திலிட்டான். அதைப் பாண்டியன் வெகு அலக்ஷியமாய்த் தனது விசாலமான மார்பில் ஒரு புஷ்பஹாரத்தைப்போல் தாங்கிப் புன்முறுவலுடன் நின்றான். இங்ஙனம் ஓர் அழகிய அருவியால் அலங்கரிக்கப்பட்ட மலைபோன்ற தோள்களுடன் விளங்கிய அவ்வைகையானைக் கண்ட விண்ணவர்கோன் வியந்தவனாகி அவனை விளித்து "வெம்புய வீரனே, மும்மன்னரேறே, மெச்சினேன் உனது எழ்களி றன்ன ஆற்றலை! மிகுந்த கனமான இந்த ஆரத்தை ஒரு புஷ்ப ஹாரமேபோல் மதித்து நீ மிக்க அநாயாஸமாகத் தாங்கித் திகழ்வதால் இன்றுமுதல் உன்னை "ஆரந் தாங்கு பாண்டியன்" என்று உலகத்தார் அறியட்டும். நீ என்னிடம் கோரிவந்தது யாதோ?" என்று வினவினன். அவ்வார்த்தைகளைச் சிறிதும் செவிசாய்த்திலன் செழியன். 'ஆவிற்கு நீரென்றிரப்பினும் நாவிற்கு, இரவின் இளிவந்ததில்' என்கின்றார் திருக்குறளாசிரியரும். 'சிறு சேய்க்குச் சோறென்று ஏந்தினும், அக் கரங்கட்கு மறுபாவம் வேண்டுவதில்' என்பதையும் யாமறிவோம். "இழிவிழிவு இரத்த விழிவு, என்று முக்காலும் இழிவு இரத்தலேயாகும். ஆகவே யாம் அதைச் செய்யவே மாட்டோம். எமது அரணை அன்னியன்கைப் படினும், எமதாவியே நீங்கினும், இவ் வற்பத்தொழிலை யாம் புரியோம்" என வெண்ணினன் செந்தமிழ் நாடன். தன் நாட்டிற்கு இன்றியமையாத மழைவளத்தைச் சிறிதுமவன் கருதவில்லை. தேவர்கோனின் தயவைத் துரும்பளவேனும் எதிர்பார்க்கவுமில்லை. அக்கணமே அமராபதி விட்டகன்று ஆலவாய் புகுந்து வாழ்வானாயினன் மதுரைமன்.

பின்பு இடிக்கரசன் இட்ட கட்டளையால் கொங்கன் கோழிக்கோன் நாடுகளில் மாத்திரம் சோனைமாரியாய் மழை பொழிந்தது. க்ஷாமமொழிந்து க்ஷேமந் தாண்டவமாடலாயிற்று. ஏற்கெனவே வரப்புயர்ந்திருந்த அந்நாடுகளில் இப்பொழுது மழையால் நீருயர்ந்தது. நீருயர்ந்ததும் நெல்லுயர்ந்தது. நெல்லுயர்ந்ததும் குடியுயர்ந்தது. கொடியுயர்ந்ததும் கோலுயர்ந்தது, கோலுயர்ந்ததும் கோனுயர்ந்தனன். ஆனால் பாண்டிய நாடு மாத்திரம் பண்டைப்படியே பஞ்சத்தால் மிகமிகப் பரிதவித்தது.

அவ்வாறிருக்கின்ற காலத்திலொருநாள் வழுதி வல்லான் வேட்டையாடும்பொருட்டு ஆகாயத்தை யளாவிய பொதியமலைச்சாரலை யடைந்து ஆங்குள்ள ஆளி, காளி, சார்த்தூல குஞ்சரங்களையும்; எண்கு, உடும்பு, சம்புக முட்பன்றிகளையும்; கருமான், கருத்தபம் செந்நாய் முயல்களையும்; ஒட்டைச்சிவிங்கி, காண்டாமிருகம், மாசுணம், பெருநாரக்களையும்; கோட்டான், கழுகு கொக்கு காடை கவுதாரிகளையும் எட்டிக்குத்தி வெட்டி வதைத்தான். அந்தச் சமயம் அத்தென்கிரிச் சிகரத்தில் புட்கலாவர்த்தமாகிய நான்கு மேகங்களும் இறங்கியிருத்தலைக் கண்ணுற்றான் தென்னவன். "நம்மை யவமதித்த ஆயிரங்கண்ணனது அடிமைகளாகிய இவைகளுக்கு என் தேயத்தில் என்ன வேலை? யாருடைய உத்தரவின்மேல் இவைகள் இங்கே வந்திருக்கின்றன?" என்றெண்ணிச் சினந்தான். கண்கள் கோவைப்பழ மொப்பச் சிவந்தன. களிறின் மீது பாயும் காளத்தைப்போல் பாய்ந்தான். அக்கார் மேகங்களை விடாப்பிடியாய்ப் பிடித்து விலங்கிட்டான். தன் நகருக்குக் கொண்டுபோய்ச் சிறைச்சாலையி னோர்மூலையில் சிறியதோர் அறையில் அடைத்துப் பூட்டிவிட்டான். மேகமூர்த்தோன் செவிகளுக்குச் செய்தி யெட்டிற்று. அக்கினியைப்போற் கனன்றெழுந்தான். "இதென்ன காலத்தின் கோலம்? ஒரு சமயம் பாரந்த பாவையை வளறச்செய்தான் இப்பாண்டியன்; இன்னொரு சமயம் அதிபார ஆபரணத்தைக் கேவலம் ஓர் ஆரத்தைப்போல் அணிந்து விளங்கினன். இது சமயம் நமது மேகக்குழாங்களையே பிடித்துச் சிறு சிறையிலடைத்துவிட்டான். என்னே ஒரு நரனது பராக்கிரமம்? என்னே ஒரு மானிடனுடைய மதம்? சீச்சீ! என்போலியருக்கு இதைவிட மானக்குறை வுண்டோ? இவ்வச்சிராயுதத்தின் வலிமை எங்குற்றதோ தெரியவில்லையே. உச்சைச்சிரவத்தின்மீது நான் சவாரி செய்வதற்கு அருகனல்லேன். ஐராவதத்தை அடக்கியாள்கின்ற எனக்கு ஓர் அற்பமனிதனை அடக்க ஆற்றலில்லையே. அண்டர்கோனென்றும், தேவர்கோனென்றும் என்னை வீணுக்கு அழைக்கிறார்களே" என்று பற்பல விதமாய் எண்ணியெண்ணி உள்ளம் நொந்தான். நொந்தால் பிரயோஜன மென்ன? உடனே சிம்மநாதம் செய்து எழுந்தான். "ஹே, மானிட வர்க்கத்தானே! தேவவர்க்கத்தானாகிய எனது திறமை தெரியாமல் தருக்கடைந்து துடுக்கான இக்காரியங்களைச் செய்துவருகிறாய். 'அடாது செய்பவர் படாது படுவர்' என்பதை அறிவாய்போலும். இருக்கட்டும்; இதோ ஒருகணத்தில் உன் கர்வத்தைக் கழிக்கின்றேன். கொட்டினால் தேள் கொட்டாவிட்டால் பிள்ளைப் பூச்சியென்பது உலகவழக்க மல்லவா? கொட்டிக் காட்டுகின்றேன், இதோ உன் கொட்டத்தை அடக்குகின்றேன்" என்று ஒருவாறு தைரியங் கொண்டு தன் தெய்வப்படையை ஆயத்தப்படுத்தினன். யுத்தஸன்னாகஞ் செய்துகொண்டு பூலோகஞ் சார்ந்தான். செந்தமிழ் நாடனது வலிமைமிக்க கோட்டையைச் சூழ்ந்துகொண்டான். அட்டஹாஸஞ் செய்து ஆர்ப்பரித்தான். சிம்மநாதஞ் செய்து செழியனைச் சமர்க்கழைத்தான்.

பனங்காட்டு நரி சலசலப்பிற் கஞ்சுமோ? கடல் சுவற வேல்விட்ட வழுதிக்கு இந்த ஸ்திரீலோல வலாரியொரு லக்ஷியமோ? தனது நால்வகைச் சேனைகளுடன் இரணகளம் புகுந்தான். ஐராவதமோவென்று ஐயுறும்படியான ஓர்கஜத்தின்மேல் ஆரோகணித்து அமர்க்களத்தை அலங்கரித்தான். தோள்தட்டிக் கொக்கரித்து ஆரவாரித்து ஆர்ப்பாடஞ்செய்தான். யுகாந்தகாலத்திற் சொரியும் மழையேயென்னத் தேவகணங்களிடத்திலிருந்துவரும் பாணங்களைத் தடுத்தான். குவை குவையாகத் தனது விஷந்தீட்டிய அம்புகளையெடுத்து அமரர் மீது தொடுத்தான். விண்ணென்றும் மண்ணென்றும் தெரியாதவாறு பாணங்களைப் பிரயோகித்து இந்திரனது சைனியங்களை மூடிவிட்டான். மண்டையுடைந்த சிலரும், தோள்கள் துணிந்த சிலரும், கைகள் ஒடிந்த சிலரும், கால்கள் மடிந்த சிலருமாகப் பூமியில் விழுந்தனர். பருந்துகளும், கூளிகளும், காகங்களும், கழுகுகளும் ககனமார்க்கத்தில் வட்டமிடலாயின. இரத்தவாறு நிரம்பி ஓடுவதும், குருதியில் தோய்ந்த நிணம் குவிந்து கிடப்பதும், அங்கமற்ற பிணங்கள் அங்கங்கே கிடப்பதும், அறுபட்ட முண்டங்கள் துள்ளித் துடிப்பதும், குத்தப்பட்ட குக்ஷிகள் குடல் சரிவதும், வெட்டப்பட்ட விரல் விழுந்து கிடப்பதும், அம்மம்ம, பார்ப்பதற்குப் பயங்கரமாய், கேட்பதற்குக் கர்ணகடூரமா யிருந்தது. தேவசைன்னியம் அத்தனையும் அழிந்ததைக் கண்டான் அமரர்கோன். எடுத்தான் தனது தேவாஸ்திரங்களை. தொடுத்தான் உடனே சந்திராஸ்திரத்தை; நொடியில் ஒழித்தான் பாண்டியன் அதனை. ஏவினன் மகவான் மோகனாஸ்திரத்தை; அதற்கெதிர் விடுத்தான் மீனவன் ஞானாஸ்திரத்தை. எறிந்தான் வலாரி வச்சிராயுதத்தை. வீசினன் வழுதி வலியதோர் வளையை. அவ்வளையோ கௌரியனுக்குச் சொக்கலிங்கப்பெருமானால் அளிக்கப்பட்ட தெய்வப்படை. அதன்முன் வச்சிராயுதம் நிற்பதற்கியலுமோ? இயலாமல் பொடிப்பொடி யாயிற்று. அதோடு மாத்திரமா? வச்சிரதரனது மௌலியும் அக்கணமே தூள் தூளாயுடைந்தது, "ஐயோ! மௌலிக்கு வந்தது மண்டைக்கும் வரும்" என்று நாணினன் விண்ணவரிறைவன். சிரங்குனிந்து ஓடினன் அமரர்கோன். "இவனென்ன சூரபதுமாதிகளை யழித்த முருகக் கடவுளோ? இராவண கும்பகர்ணாதிகளை யொழித்த இராமனோ? ஒன்றும் தெரியவில்லையே. இக் காளை எடுத்தெறிந்த இவ்வளையானது எனது மண்டையைச் சிந்தாமல் நெடு மகுடமணியைச் சிந்தியது நான்செய்த பூஜா பலனே யாம். தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போனது தம்பிரான் திருவருள் கூத்தேயாம். இனி இங்கு ஒருக்கணமும் தங்கவொண்ணாது" என்று எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணியெண்ணி ஏழைநெஞ்சம் புண்ணாகப் புழுங்கினன் புரந்தரன்.

"தென்கிரியோன் தேயத்திற் கெல்லாம் திரண்ட மழை பெய்யச் செய்வேன். மேகங்களுக்கிட்ட தளையை நீக்கித் தருமின்" என்று தென்னனுக்கோர்

ஓலையனுப்பினன். இவ்வோலையைக்கொணர்ந்த தூதன் நடுநடுங்கினனாய் உக்கிரபாண்டியனது சபாமண்டபத்தை யடைந்து அன்னவன் திருவடிகளில் சாஷ்டாங்கமாய்த் தண்டனிட்டுத் தேவநாயகனது ஸ்ரீமுகத்தை ஸமர்ப்பித்தான். அங்கு வீற்றிருந்த அமைச்சர்களி லொருவன் அவ்வோலையை வாங்கிப் பாண்டியன்முன் படித்தான். உக்கிரன் இந்திரனது சொற்களைக் கிஞ்சித்தும் நம்பாமல் உல்லங்கனஞ் செய்து வாளாவிருந்தனன். திரும்பத்திரும்பத் தேவநாதன், மேகங்களைச்சிறைநீக்கி விட்டுவிடும்படி சமாதானமாக எத்தனையோ தூதர்களைப்பொதியமலைக்காவலன்பாற் போக்கியும் சிறிதும் பயன்பட்டபாடில்லை. இவ்வரலாற்றைக் கேள்வியுற்ற இந்திரனுக்கிசைந்த நண்பனான சப்தக்கிராமாதிபதி யொருவன் பாண்டியனை நண்ணி நமஸ்கரித்து, "உக்கிரப் பெருவழுதியே! பாண்டிய பார்த்திபனே!! ராஜாதி ராஜனே!!! தங்கள் நாட்டுக்கு வேண்டிய மழைவளத்தை மேகநாதன் இனித் தவறாது நல்குவன். அவன்பொருட்டு யானே பிணை. அடியேனை ஒரு லக்ஷியமாகக் கருதி மேகங்களைச் சிறைநீக்கி விட்டருள்மின்" என வேண்டினன். தேவாதி தேவர்களையும் துரும்பென மதித்த மதுரை மன்னன், சாவதாயினும் சத்தியந் தவறாது நடக்கும் நல்லவேளாளகுலத்திலுதித்த சப்தக்கிராமாதிபதியின் வார்த்தைகளைச் சத்தியமாக மதித்து உடனே காராக்கிரகத்திலிருந்த காளமேகங்களின் விலங்கை விலக்கி வெளியே விடுத்தனன். அவைகளும் வெகு பயபக்தியுடன் வழுதிவள்ளலின் அடிபணிந்து அநுமதி பெற்று அமராபதி நோக்கிச் சென்றன.

பின்பு இடியரசன் ஏவலினால் அக் கன்னிநாட்டில் மாத மும்முறை மாண்பாக மழைபெய்து, வாவி கூப தடாக மடுக்களும், அழகிய ஆறுகளும் தெளிந்த ஊற்றுக்களும் நீர் நிறைந்து எங்கணும் நஞ்சை புஞ்சைகளும் நானாவித நிலங்களும் பச்சைப்பசேரென்று பயிர்நிரம்பிப் பற்பலவித பலன்களைப் பரிந்துதந்தன. மா பலாத் தோப்புக்களும் வாழைத் தோட்டங்களும், தென்னந்தோப்புக்களும் தேர்ந்த புஷ்பச்சோலைகளும் தளிர்த்துத் தழைத்துப் பூத்துக் காய்த்துப் பொலிவுற்று விளங்கின. கன்றுகாலிகளெல்லாம் கவலையற்று மேய்ந்தன. பெண்டிரும் ஆடவர்களும் பெருமையுடன் வாழ்ந்தனர். நெறிதவறாப் பாண்டியனும் நீதிவழுவா தாண்டுவந்தான். இரத்தலை யொழித்த மதுரைக்கிறைவனது பாண்டிய நன்னாடு எல்லாம்வல்ல இறைவனது அருளால் சீரும் சிறப்பும் பேரும் பெருமையுமாகத் திகழ்ந்தது.

ஜூலியஸ் ஸீஸர்

[ஓர் ஷேக்ஸ்பியர் நாடகம்]

[852-வது பக்கத் தொடர்ச்சி]

அங்கம் 5, களம் 3.

மஸ்ஸாலா, ப்ரூட்டஸ், கேடோ, வலூம்னியஸ், லுவஸிலியஸ் வருகின்றனர். ஸ்ட்ரேடோவும் வருகின்றான்.

ப்ரூட்டஸ்:—எங்கே, எங்கே, மஸ்ஸாலா, அவனுடலம் கிடக்கின்றது? (1).

மஸ்ஸாலா:—அதோ, அங்கு; டிடினயஸ் அவனருகு துயர்கூர்ந்திருக்கின்றான் (2).

ப்ரூட்டஸ்:-டிடினியஸ்ஸின் முகம் மேனோக்கி இருக்கின்றதே (3).

கேடோ:—கொலையுண்டு கிடக்கின்றனன் அவன் (4).

ப்ரூட்டஸ்:—ஜூலியஸ் ஸீஸர்! இன்னமும் நீ உனதாற்றல் குறையாம லிருக்கின்றாய். உனதாவி இந்தத் தடந்தோறும் நடந்து, எங்கள் கத்திகளை நேராக எங்கள் குடர்களுக்கே திருப்பிவிடுகின்றது. (5).

[பேராரவாரம் கேட்கின்றது]

கேடோ:—வீரஞ்சான்ற டிடினியஸ்! மடிந்த காஸ்ஸியஸ்ஸிற்கு இவன் முடிசூட்டினானல்லனோ,காண். (6).

ப்ரூட்டஸ்:—இவர்களைப்போல் உரோமர்கள் இருவர் இன்னமும் உயிர்வாழ்ந் திருக்கின்றனரோ?-உரோமர்களில் இறுதிபாயினர்காள், நும்பால் விடைபெறுகின்றேன் (7). நினக்கு இணையான ஒருவனை உரோம்நகரம் பெற்று வளர்ப்பதென்பது என்றும் இனி இயல்வதன்று (8).—நண்பர்காள், இறந்து கிடக்கும் இவனுக்கு, நீங்கள் காண நான் செலுத்துவதனினும் அதிகமாகக் கண்ணீர்க் கடன்பட்டுளேன் (9).—வேளையும் நான் தேடிக்கொள்வேன், காஸ்ஸியஸ், வேளையும் நான் தேடிக்கொள்வேன் (10). வாருங்கள், இவனுடலத்தைத் தாஸ்ஸோஸிற்கு அனுப்புவோம். நாம் மனங்கலங்க நேரலாமாதலின், இவன் உத்தரகிரியைகளை நம் பாசறையில் (11). செய்யவேண்டா—லுவஸிலியஸ், வா; இளையோய் கேடோ, வா; போர்க்களம் புகுவோம்-லேபியோ, ப்ளேவியஸ், நம் படையினை நடத்துங்கள்—இப்பொழுது மணி மூன்று; உரோமர்காள், இரவு வருவதன்முன் இவ் விரண்டாம்போரில் நம்முடைய அதிர்ஷ்டத்தைச் சோதிப்போம் (12).

[போகின்றனர்]

இவரனைவரும், ப்ரூட்டஸ் காஸ்ஸியஸ் ஆகிய இருவருக்கும் நண்பர். ஸ்ட்ரேடோ, ப்ரூட்டஸின் ஏவலாளன்.

(1) காஸ்ஸியஸ் தற்கொலை புரிந்துகொண்ட செய்தியை ப்ரூட்டஸிற்குச்சொல்லி மஸ்ஸாலா அழைத்துவரும்போது காஸ்ஸியஸ் எவ்விடத்தில் மாண்டுகிடக்கின்றான் என்று ப்ரூட்டஸ் மஸ்ஸாலாவைக் கேட்பது இது.

(2) டிடினியஸும் தற்கொலை புரிந்துகொண்டது அறியாமல்,அவன் காஸ்ஸியஸின் சவத்தினருகு துக்கங்கொண்டாடுகின்றான் என்று மஸ்ஸாலா எண்ணினான்.

(3) துக்கத்தால் முகம் கவிழ்ந்திருப்பதுபோக, டிடினியஸ்ஸின் முகம் மேல்நோக்கி யிருப்பதுகண்டு ப்ரூட்டஸ் அயிர்க்கின்றான்.

(4) டிடினியஸ்ஸை யாவரோ கொன்றுவிட்டாரென்று கேடோ நினைத்தான். ஆயினும், காஸ்ஸியஸ்ஸின்பிரிவிற்கு ஆற்றாமல் டிடினியஸ்ஸும் தற்கொலை புரிந்துகொண்ட உண்மையை ப்ரூட்டஸ் ஊகித்துவிடுகின்றான்.

(5) இறந்தபின்னும் ஸீஸரின் ஆற்றல் குறையவில்லை. எங்களையே தற்கொலை புரியவைத்து ஸீஸரின் ஆவி தன் பழியைத் தீர்த்துக்கொள்கின்றது—என்பது பொருள்.

(6) ப்ரூட்டஸ் கொடுத்தனுப்பிய வெற்றிமாலையை டிடினியஸ், காஸ்ஸியஸ்ஸின் சவத்தின் நெற்றியிற் சூட்டியதை இது குறிக்கின்றது.

(7) இவ்விருவரும் இறந்தபின், இனி உரோமன் என்ற பெருமைக் குரியவன் யாருமில்லை, என்று, காஸ்ஸியஸ்ஸையும் டிடினியஸ்ஸையும் ப்ரூட்டஸ் பாராட்டுகின்றான்.

(8) இது காஸ்ஸியஸ்ஸின் சவத்தைப் பார்த்துச் சொன்னது.

(9) இப்பொழுது வடிக்கின்ற கண்ணீரின் அளவுடன் நான் இவனை இழந்து படும்துயரம் முடிந்துவிட்டதென்று எண்ணாதீர்—என்பது பொருள்.

(10) இப்பொழுது அல்லாவிடினும், உனக்கு நான் வேண்டிய அளவு அழுவதற்குப் போதிய காலம் தேடிக்கொள்வேன்—என்பது பொருள்.

(11) பாசறை—போர்ப்படைகள் தங்குமிடம்.

(12) இன்று பொழுதுபோவதன்முன் பகைவரை மறுமுறை எதிர்த்துப் பொருது நம்முடைய அதிர்ஷ்டம் எவ்வளவில் இருக்கின்றதென்பதை இறுதியாகச் சோதித்துவிடுவோம்—என்பது பொருள்.

மூன்றாங்களம் முற்றிற்று.

கம்பராமாயணம்

ஆரணிய காண்டம்—7. மாரீசன் வதைப் படலம்.

[815-வது பக்கத் தொடர்ச்சி]

உணரா திம்பர் உடனடுங் கினரே.

இன்னவாறு இலங்கைமாநகர் அரிய வன்துயரெய்தி வருந்த வந்தனள் தங்கை. வந்து, குன்றினடி வீழ்ந்து குழைகின்ற கொண்டலென இராவணன்தன் பொன்திணி கருங்கழல் விழுந்தனள் புரண்டாள். மூக்கிலாதிவள் மூவுலகாள்பவன்முன் முறையிட வருதலும் என்னினி விளையுமோவென எங்கும் யாவையும் பருவரல் பெரிதெய்தி வெருவிய தன்மையைக் கம்பர் விளம்புகின்றனர்.

மூடின திருட்படலை மூவுலகு முற்றச்
சேடனும் வெருக்கொடு சிரக்குவை நெளித்தான்
ஆடின குலக்கிரி யருக்கனு மயிர்த்தான்
ஓடின திசைக்கரிக ளும்பரு மொளித்தார்

[மூன்று உலகங்கள் முழுவதும் இருள் படலம் மூடிக்கொண்டது. ஆதிசேஷனும் அச்சங்கொண்டு தன் ஆயிரந் தலைகளையும் நெளித்தான். குலக்கிரிகள் அசைந்தன. சூரியனும் திகைத்தான். திசையானைகள் தம் இடம்விட்டு ஓடலாயின. தேவர்களும் ஒளித்துக்கொண்டனர்.]

ஆதித்தன்முதல் ஆதிசேடன் ஈறாக, இடைகிடைந்த கிரிகளும் கரிகளுமடங்கப் பிரபஞ்ச மடங்கலும், இவ்வரக்கர்கோன் கொள்ளவிருக்கும் கோபத்தால் என் விளையுமோ எனவஞ்சி நடுங்கியதென்றால், அவன் அவைக்கண் அன்று அங்கு "நின்றவர் இருந்தவரோடு ஓடுநெறி தேடாமல்" தரிப்பரோ! அப்பொழுது,

விரிந்த வலயங்கண் மிடைதோள் படரமீதிட்
டெரிந்த நயனங்க ளெயிறின் புறமெரிப்ப
நெரிந்த புருவங்களிடை நெற்றியினை முற்றத்
திரிந்த புவனங்கள்வினை தேவரு மயிர்த்தார்

[அகன்ற வாகுவலயங்கள் நெருங்கியிருக்கின்ற இராவணனுடைய தோள்கள் கோபத்தால் பெருக்கவும், அவனுடைய கண்கள் மிக்க நெருப்புப்பற்றி எரியவும், பற்களின் வெளிப்புறம் கோபாக்கினி வீசவும், நெரித்த புருவங்கள் அவன் நெற்றியின் நடுவில் கூடவும், அதுகண்டு புவனங்களெல்லாம் தமோமிச் சுழன்றன. என்ன நேருமோ இனி எனத் தேவர்களும் திகைத்தனர்]

ஆற்றல்சால் இராவணன் இன்னண மோர் சீற்றங் கொள்ளுதலும்,

தென்றிசை நமன்றனொடு தேவர்குல மெல்லாம்
இன்றிறுதி வந்தது நமக்கென விருந்த
நின்றுயிர் நடுங்கியுடல் விம்மி நிலைநில்லா
ரொன்றுமுரை யாடலில ரும்பரினொ டிம்பர்

[இன்று தமக்கு இறுதி வந்தது என்று தென்திசை நமனுடன் தேவர்களும் இருந்தனர். இவ்வுலகத்திலுள்ளவர்களும் தேவர்களும் உயிர்நடுங்கி உடல்வீங்கி ஒருநிலை நில்லாதவர்களாகி ஒன்றும் பேசாம லிருந்துவிட்டனர்.]

இதுதானோ இச்செய்யுளின் பொருள், அல்லது வேறேதேனு மதனுட் கரைந்துறைகின்றதோ, யாவரறிவார்? இச்சீற்றம் இராவணன் வாழ்வினோடு முடிய இருக்கின்றது.

மசரத மனையவர் வரமும் வாழ்வுமோர்
நிசரத கணைகளால் நீறு செய்யயாம்
கசரத துரகமாக் கடல்கொள் காவலன்
தசரதன் மதலையாய் வருதுந் தாரணி

என்று எம்பெருமான் பண்டொருகால் திருவாக்களித்திருந்ததும் அஃதின்று நிறைவேறும் நாள் வந்ததென்பதையும் தேவர்க ளறிவார். ஆதலின் அரக்கர்கோன் கொண்ட இவ் வெகுளிக்கு அஞ்சி நடுங்கி அழுங்கினாரலர். இவ்வெகுளி இராவணன்பால் மூண்டு விளைவதே அவன் அழிவிற்கும் அதனால் தேவர் நன்மைக்கும் வித்திட நிற்கின்றது. வருவது தெரிந்திருப்பினும், சீற்றமுடைய இவ்விராவணன்தன் மெய்ப்பாடு கண்டு திடுக்கிட்ட அமரர்கள் செய்கை திகைத்தாரன்றிச் சிந்தை மாழ்கிவிடவில்லை. "இத்துணைக் கோபத்திற் கெதிரே, எம்பெருமான் ஈந்த வாக்கு நிறைவேறுதல் எத்துணைக் கடினமாகுமோ" என்று அருக்கன் அயிர்த்தான். "இவன் முன்னர் இப்பொழுது நிற்பது நேரிதன்று" என்று உம்பர் ஒளித்தார். இராமபிரான் மேற்கொண்ட வினையின் அருமையைத் தேவரும் அயிர்த்தார். மற்றிரு உலகங்களின் நிகழ்ச்சிகளை அறிதற் கிடமின்றிப் பாதளத்திற் [illegible]

ஆதிசேடன், முன் திருமால் அளித்த அபயமும், அதற்கிணங்க இப்பொழுது இராமனு யவதரித்திருப்பதும், அவ்வாக்கு நிறைவேறி அமரர்தம் இடுக்கண் அகல்வதற்கு மூக்கிலாத் தங்கையிவளைக் கண்டு இராவணன் மாபெருங்கோபம் எய்தவேண்டியது இன்றியமையாததாவதும், கண்டு கேட்டுத் தெரிந்துகொள்ளும் வகையற்றனனாய், இச் சீற்றத்திற் குளம்பதைத்து, "ஐயோ, உய்யேன் உய்யேன், இனி" என மெய்யே அஞ்சி எஞ்சினனேனெவ அயிர்த்தல் நேரிதன்று. கட்செவி ஈராயிரமுடைய இவ் வரவின் அண்ணனும், ஏனையோர் போன்றே, அரக்கர் வேந்தனது சீற்றத்தின் வேகத்தால், "திடுக்கிட்டே" சிரக்குவை நெளித்தானல்லது வேறில்லை. எனின்,

> தென்திசை நமன்றனொடு தேவர்குல மெல்லா
> மின்றிறுதி வந்தது நமக்கென விருந்த

என்னுமிவ்வடிகள் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுகின்றனவென் றெண்ணற்கிடந்தருகின்றன. மறலியும் மற்றுள அமரர்களும் தமக்கே இறுதிவந்துவிட்டதென்னும் பெரியதோ ரச்சத்தால் கையறவெய்திச் சோர்ந்து சும்மாவிருந்தனர் என்ற பொருளை வெளிப்படுத்தும் இச்சொற்கள் வேறோர்கருத்தையும் உட்செருகிச் சிரிப்பனவாகலாம். தோளுடை நெடும்பணை துவைக்குந் தோறெலாம், இராவணற்கு இசைக்கு நாட் கடிகை கூறவந்த காலன் சுற்றியசேலையாற் செங்கையிற் சிறியவாய் புதைத்து நின்றதன் இரகசியத்தை ஒருவாறு ஓர்ந்துகொண்டிருப்பவர், "நமனோடு உசாவிய தேவர்குலமெல்லாம் இன்று நம்முடைய துன்பத்திற்கடியுடன் இறுதிவந்தது என்று உவந்து அச்சம் நீங்கி அமைதியாயிருந்தனர்" என்ற பொருள் இவ்வடிகளுக்குப் பொருந்துமெனத் துணிவார். 'நமன்றனொடு' என நமனைப் பிரித்துப்பேசுவதன் கருத்து இன்னதே யாதல்வேண்டும்.

இச்செய்யுளின் பின்னைய இரண்டடிகளும் இவ்விதமே இருபொருள்கள் காட்டுகின்றன.

> நின்றுயிர் நடுங்கியுடல் விம்மிநிலை நில்லா
> ரொன்றுமுரை யாடலில ரும்பரினொ டிம்பர்

என்னுங்கால், முதலிரண்டு அடிகளில் உம்பர் வெருவினரென்று கூறிய செய்தியையே மீண்டும் வேறோர் வகையிற் கம்பர் கூறினரென்று கொள்வது நேரிதன்று. ஆதலின், உம்பரும் இம்பரும் உயிர் நடுங்கி உடல் நடுங்கி மிக்கப் பயத்தினால் ஒன்றும் பேசாமல் திகைத்தனர் என்னாமல், "இராவணன்தன் வெகுளியால் விளையநின்ற அவன் அழிவினை அறிந்திருந்த உம்பரோடு யாதும் உரையாடாமையால் இம்பர் உயிர் நடுங்கி உடல்விம்மி நிலைநில்லாராயினர்" என்னுமொரு பொருளை ஏற்புடைத்தாகும். உம்பரினொடு இம்பர் உரையாடினராயின், இவ்விம்பரும், இன்றிறுதி வந்தது நம் துயர்க்கென விருப்பார்.

இன்னணம் அனைவரும் அவரவர்க் கேற்றவாறு அஞ்சி நிற்க, வந்தடி வீழ்ந்த தங்கையை எதிர்நோக்கி இராவணன்,

> *மடித்தபில வாய்கடொறும் வந்துபுகை முந்தத்
> துடித்த தொடர் மீசைகள் சுறுக்கொள வுயிர்ப்பக்
> கடித்தகதிர் வாளெயிறு மின்கஞல மேகத்
> திடித்தவுரு மொத்துறி யாவர்செய லென்றான்

[கோபத்தால் மடித்த பிலங்கள் போன்ற தன் பத்து வாய்களிலும் கோபத்தீயின் புகை எழுந்து பொங்கவும், துடித்த அடர்ந்த மீசைகள் பொசுங்கும்படி பெருமூச்சு வெளிப்படவும், கடித்திருக்கும் கூரிய ஒளிபொருந்திய பற்கள் மின்னல்போற் பிரகாசிக்கவும், மேகத்தில் இடித்த இடியைப் போன்று பேரொலி செய்து, "இது யாவருடைய செய்கை என்றான்.

சூர்ப்பணகையின் விடை ஆபத்தமாக விருக்கின்றது.

> கானிடை யடைந்துபுவி காவல் புரிகின்றார்
> மீனுடை நெடுங்கொடியி னோனனையர் மேல்கீ
> ழூனுடை யுடம்புடைமை யோருவமை யொவ்வா
> மானிடர் தடிந்தனர் வாளுருவி யென்றாள்

[காட்டிற்கு வந்து பூமியைக் காக்கின்றவர்களும், மீனக் கொடியையுடைய மன்மதனைப் போன்றவர்களும், விண்ணுலகத்திலும் மண்ணுலகத்திலும் ஊன் உடைய உடம்புடைய ஒருவரும் ஒப்பாகாதவர்களுமாகிய மானிடர் வாளை உருவி அறுத்தனர், என்றாள்]

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

டானிக்குகள்:		தைலங்கள்:	
பாதாமி லேகியம்	ரூ. 3-0-0	சந்தனாதி 6 அவுன்ஸ்	ரூ. 1-0-0
ரதிவல்லப லேகியம்	2-0-0	அமிர்தாமலக "	0-12-0
மஹா திராக்ஷாதி லேகியம்	2-0-0	பிருங்காமலக "	0-12-0
குழந்தைகளுக்கு		ஸ்திரீகளுக்கு	
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை	0-4-0	ஸூதக டானிக்	2-0-0
பால சஞ்சீவினி	0-4-0	கர்ப்பாசய டானிக்	2-0-0
பால ஸுதா (டானிக்)	1-0-0	ப்ரஸவ லேகியம்	1-8-0

மடட ச்யாவனப்ராசா   மடட பிருங்காமலக தைலம்   கோரோஜனா மாத்திரை

"நஞ்சன்கூடு பல்பொடி"

சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) I.D.L. ஸ்பெ. மெடிகேடட்-டப்பி

I.D.L. ச்யாவனப்ராச சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு

மூலிகைசேர்ந்த சிற்றுமணக்கு எண்ணெய் காஸ்ட்ராலகஸ்

ஜவரேக்

• [பஸ்பங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

சென்னைத் தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர் திருவாளர் S. வையாபுரிப் பிள்ளையவர்களால்

— பதிப்பிக்கப்பெற்ற நூல்கள் —

தமிழகராதி ஆதார நூற்றொகுதி நாம தீப நிகண்டு.

நிகண்டுகளின் வரலாறு, ஆசிரியரது காலம், நூலின் நயங்கள், முதலியன அடங்கிய சிறந்த முன்னுரை கொண்டது. பொருட் பெயர்களை விளங்கக் கூறும் செவ்விய உரைபாடமுள்ளது. நூலின்கண் வந்துள்ள பொருட்பெயர்களனைத்தையும் முற்ற வுணர்த்தும் அனுபந்தம் பெற்றது. சுமார் 12000 சொற்கள் கொண்ட சிற்றகராதியாக உதவுந் தகையது.

விலை ரூபா 2-0-0

அரும்பொருள் விளக்க நிகண்டு.

சிறந்த ஒரு சொற் பல்பொருள் நிகண்டு. நிகண்டுகளின் வரலாற்றினை விளக்கும் விரிந்த முன்னுரையுடன் கூடியது. சொல்லின் பொருள்களை யெளிதாகத் தெரிந்துகொள்ளுதற்குப் பலபொருளொருசொல் லகராதி சேர்க்கப்பட்டுள்ளது. விலை ரூபா 1-4-0

கம்பராமாயணம்—உயுத்தகாண்டம்.

முதல் மூன்று படலங்கள்: பல ஏட்டுப் பிரதிகளை ஒப்புநோக்கித் திருத்தியது; பாடபேதங்களனைத்துங் கொடுக்கப் பெற்றது. விலை ரூபா 0-6-0

திருக்குறள்

மூலமும் சொற்குறிப் பகராதியும் விஷய ஒப்புக்குறளும் (வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது மாணுக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று. விலை அணா 0-12-0

களவியற் காரிகை.

ஒரு சிறந்த அகப்பொரு ளிலக்கணநூல்; முதன் முறை இப்போதுதான் அச்சில் வெளிவந்தது. கிடைத்தற்கரிய பல அரிய நூல்களிலிருந்து எடுக்கப்பெற்ற மேற்கோள்களை யுடையது; பல அனுபந்தங்களையுடையது. தமிழாராய்ச்சியாளர்க்குப் பெரிதும்பயன்படுவது. க்ரௌன் அளவில் 170 பக்கங் கொண்டது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா 3-0-0

நூற்பொருட் குறிப்பு.

1. இறையனார் களவியலுரை; 2. குறுந்தொகை; 3. திருக்கோவையார்; 4. நற்றிணை; 5. களவழி நாற்பது; 6. தேவாரம்; 7. வீரசோழியம்; 8. நாலாயிர திவ்யப் பிரபந்தம் முதலிய எட்டு நூல்களின் பொருட் குறிப்பு அடங்கியது. தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைப் பண்டிதர் ஸ்ரீமான் மு. இராகவையங்காரவர்களால் தொகுக்கப்பட்டது. டெம்மியளவில் 175-பக்கங்கள் உடையது. இலக்கிய ஆராய்ச்சிக்கும் சரித்திர ஆராய்ச்சிக்கும் மிக இன்றியமையாதது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா 10-0-0

இராஜசுந்தரம்.

ஒரு நவீனகம். இனிய எளிய நடையில் எழுதப் பெற்றது. விலை ரூபா 0-8-0

தினகரமாலை யென்னும்-தினகர வெண்பா

திருக்குறளின் அதிகாரத்திற் கொரு வெண்பாவாக 133 வெண்பாக்களைக் கொண்டது. இது ஒரு பண்டை நூல். இதைப் பதிப்பித்தவர் ஸ்ரீமான் S. வையாபுரி பிள்ளை, B.A., B.L., விலை அணா 0-6-0

கலா நிலயம் ஆபீஸ், வேளாளர் தெரு, புரசை, சென்னை.

ANCIENT JAFFNA

MUDALIAR C. RASANAYAGAM C.C.S.

An authentic history of North Ceylon, Particularly of Jaffna based on archeological Epigraphic and linguistic researches is stated here in a connected manner from ancient times up to the occupation of the Island by the European Professor. S. Krishnasamy Iyengar has given an appreciative foreword.

PRICE Rs. 5-8-0.

KALANILAYAM

PURASAWALKAM :: VEPERY, MADRAS.

ஏமாங்கதத் திளவரசன்

ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.,

எழுதியவோர்

செந்தமிழ்க்காதை.

கலா நிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை. விலை ரூ. 1—4—0

கலா நிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

தலையங்கங்கள்:—அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச்சோதனை 8. விஷயத்திற்கேற்ற விளம்பரம். முயலுக்கு முயலவேண்டா. விளம்பினல் வெட்கக்கேடு. கல்லாதபேர்களே நல்லவர்கள் 3. நாணத்தால் நைவார்திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது, உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி. அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேதவியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள, "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

குறுந்தொகை:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச்சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளையறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

இலஞ்சிப்பாவை:—(T. S. நடராஜபிள்ளை, B. A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவு நாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இணைவிழைச்சி, விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் பாடம்:—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

நம்மாழ்வார் வைபவம்:—(K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ம்பத்து 6-ம் தசகம் வரையிலும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும்,நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

1931-வது வருடம் 4-வது வால்யூம்.

தலையங்கம்:—அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 4. அருமையினு மருமை 4. மறப்பது முறுதியாமே. நள்ளாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 50.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்தியாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

சூளாமணி:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெறாத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

யாப்பிலக்கணம்:—உறுப்பியலும், செய்யுளியலில் பாக்களின் இலக்கணமும்.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

ஆண்டாள்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அனுபவம், யௌவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை.

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

பிஸாரோ நாடகம்:—ஆங்கிலப்புலவர் R.B. Sheridan எழுதிய நாடகமொழிபெயர்ப்பு.

நவராத்திரி நாடகம்:—(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

சிதம்பரதேவர் சரிதம்:—(Dr. V. S. அருணாசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவகரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் நாவல்.

களவியற் காரிகை:—(S. வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறாத நூல். அகப்பொருளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

கந்தபுராணமும் சங்க நூல்களும்:—(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— பைண்ட் செய்யாதது ரூ. **7 8 0**
காலிகோ கில்ட் பைண்ட் ரூ. **8 8 0** ஆப்லெதர் கில்ட் பைண்ட் ரூ. **9 0 0**

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். எழெட்டெணுக்களுக்கு மேல் இரயில்வே கட்டணம் ஆகாது. பர்மா, ஸிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னப்பிரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.

வர்த்தமானம்

மனிதனைத் தின்னும் மரம்:—இந்துமஹா சமுத்திரத்திலுள்ள மடகாஸ்காதீவில் மாமிசபக்ஷணம்செய்யும் சில மரங்கள் இருக்கின்றனவாம். அம்மரத்தின் உயரம் $7\frac{1}{2}$ அடி. அதன் சுற்றளவு 18 அடி. தோற்றத்தில் அம்மரம் அன்னாசிப்பழச் செடியை ஒத்திருக்குமென்று தெரிகின்றது. அம்மரத்தின் உச்சியிலிருந்து சிறு கயிறுபோன்ற கொடிகள் நாலாபக்கமும் தொங்கிக்கொண்டிருக்குமாம். இம்மரத்தின் இலையின் கனம் 9 அங்குலம் இருக்குமென்று சொல்லப்படுகின்றது. இலைகளில் மிக்க கூர்மையான முட்கள் உண்டு. அங்கே பிக்மீஸ் என்று அழைக்கப்படும் குள்ளமனிதர்கள் வசிக்கின்றார்கள். இந்த மரத்திலிருந்து இறக்கப்படும் இரஸத்தை இக் குள்ளமனிதர்கள் குடித்து மயங்கிக் கிடப்பார்களாம். சிற்சில சமயங்களில் இம்மரத்திலிருந்து இரஸத்தை இறக்குங்கால், அவர்கள் இம்மரத்திற்கு இரையாவதுண்டாம். யாராவது ஒருவன் இம்மரத்திற்கு அருகில் வந்துவிட்டால், மரத்தினது கயிறுபோன்ற சிறு கொடிகள், அவனைச் சுற்றிக் கொள்ளுமாம். உடனே இலைகள் வந்து அவனை மூடிக் கொள்ள, அம்மனிதனைத் தூக்கிக்கொண்டு அம்மரம் நிமிர்ந்துவிடும். ஒருவாரம் ஆன பிறகு எலும்புகள் மாத்திரம் கீழே விழும். இப்படி அம்மரம் மனிதபக்ஷணம் செய்துவருகின்றது என்று தெரிகின்றது.

***

கரோலின் மேரி என்னும் பெயருடைய ஒரு மாது லண்டன் நகரில் இருக்கின்றார். அவருக்கு இப்பொழுது வயது 107. சென்ற மாதம் 13-ந்தேதி யன்று அவரது 107-வது பிறந்தநாள் கொண்டாடப்பெற்றது. இம்மாது திடகாத்திரத்தோ டிருக்கின்றாராம்.

***

ஆப்பிரிக்காவில் 1910-ம் ஆண்டில் 5 லட்சம் கிறிஸ்தியர்கள்தான் இருந்தனராம். இப்பொழுது அங்கிருக்கும் கிறிஸ்தியர்களின் தொகை 40 லட்சம். அவர்களெல்லாம் காதலிக் கிறிஸ்தவர்களாம்.

***

95,000 டன் எடையுள்ள ஒரு பெரிய யாத்திரைக் கப்பல் பிரான்ஸில் கட்டப்படுகின்றதாம். அக்கப்பலின் நீளம் 1027 அடி. இதனில் 14 அடுக்குக்கள் அமைக்கப்படுமாம். கப்பல் வேலைக்காரர்களைத் தவிர அதனில் 2500 பேர் எல்லா வசதிகளுடனும் பிரயாணம் செய்யமுடியுமாம்.

***

மத்தியமாகாணத்தின் வருமானவரி இலாக்காவிற்கு 13 குமாஸ்தாக்கள் தேவையென்று விளம்பரம் செய்யப்பட்டிருந்ததாம். இந்த வேலைக்கு 4000 பேர் மனுச்செய்தனராம்.

***

மூன்றாவது வட்டமேஜை மஹாநாடு நவம்பர் மாதம் 15-ந்தேதி லண்டனில் கூடுமென்று இந்திய அரசாங்க அறிக்கை கூறுகின்றது.

***

செட்டிநாட்டுக் குமார ராஜாவான ஸ்ரீமான் M. A. முத்தையசெட்டியார், சென்னை கார்ப்பொரேஷன் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். அவர் தம்மைத் தலைவராகத் தேர்ந்து எடுத்தற்குத் தமது நன்றியைச் சபையாளருக்குச் செலுத்தி, தாம் எக்கட்சியையும் சாராது, நடுநிலையில் இருந்து காரியங்களை நடத்துவதாகவும், தமது சொந்த வேலையைவிடக் கார்ப்பொரேஷன் வேலையைப் பெரிதாகக் கருதி உழைப்பதாகவும் கூறினர்.

***

திருச்சியில் ஜில்லாபோர்டின் தலைவர் எலக்ஷன் நடந்தது. தலைவர் பதவிக்கு ஸ்ரீமான் T. M. நாராயணசாமி பிள்ளையும், ராஜா சிதம்பரஞ் செட்டியாரும் நின்றனர் என்றும், இறுதியில் T. M. நாராயணசாமி பிள்ளையவர்கள் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்றும் திருச்சிச்செய்தி கூறுகின்றது.

***

காஷ்மீர அரசாங்கத்தார், அந்நாட்டில் உள்ள இந்து தேவாலயங்களில் இந்துக்களானோர் அனைவரும் செல்லலாம் என்று உத்தரவிட்டிருக்கினர் என்று காஷ்மீரத்துச் செய்தி கூறுகின்றது.

***

அக்டோபர் மாதம் 31-ந்தேதி கோயம்புத்தூரில் தமிழ்நாட்டுப் பெண்கள் மஹாநாடு ஒன்று கூடிற்று. ஸ்ரீமதி ஜேஸுதாஸ் என்பவர் இம்மஹாநாட்டில் தலைமை வகித்தார். பெண்களுக்கும் ஆடவர்களுக்குள்ள உரிமைகளை யளிக்கவேண்டுமென்றும், பெண் சுதந்திரமில்லாமல் எந்நாடும் முன்னேற முடியாதென்றும் இம்மஹாநாடு வற்புறுத்தியது.

***

மந்திரி சபை:—சென்னை அரசாங்க மந்திரி சபையில் ஏற்பட்ட குழப்பம் பழைய மந்திரி சபை கலைவதில் முடிந்தது. பின் பொப்பிலி ராஜாவை முதன் மந்திரியாகக்கொண்ட மந்திரி சபை கூட்டப்பெற்றது. இச்சபையில் பொப்பிலி ராஜா முதன் மந்திரியாவும், ஸ்ரீமான் P. T. ராஜன் இரண்டாவது மந்திரியாகவும், ஸ்ரீமான் குமாரசாமி ரெட்டியார் மூன்றாவது மந்திரியாகவும் நியமிக்கப்பெற்றனர். இம் மந்திரிசபை கவர்னரால் ஏற்கப்பட்டது என்று சென்னை அரசாங்க விசேஷ கெஸட் அறிவிக்கின்றது. ஸ்ரீமான் முனிசாமி நாயுடு, ஜனநாயகக்கட்சி யொன்று ஸ்தாபனம் செய்து வருகின்றார் என்று தெரிகின்றது.

***

அரசியற் கைதிகள் விடுதலை:— இத்தாலியில் பாஸிஸ்டு அரசாங்கத்திற்கு விரோதமாயிருந்து குழப்பம் செய்த எல்லா அரசியற் கைதிகளையும் விடுதலை செய்ய இத்தாலிய அரசாங்கம் தீர்மானித்திருக்கின்றது என்று அயல்நாட்டுச் செய்தி கூறுகின்றது.

***

வேலை நிறுத்தம்:—பெரம்பூர் எம். எஸ். எம். ரயில்வே ஓர்க்ஷாப் வேலை நிறுத்த நிலையில் இன்னும் மாறுதல் ஒன்றும் ஏற்படவில்லை. ரயில்வே அதிகாரிகள் இணங்கி வருவதற்கு இசையவில்லை. அரக்கோணம் ஓர்க்ஷாப் வேலையாளர்களும் வேலை நிறுத்தத்தில் சேர்ந்து கொண்டனர். ஆங்கிலோ இந்தியர்களும் வேலை நிறுத்தத்தில் சேர்ந்திருக்கின்றனர்.

***

தீண்டாமை விலக்கு விஷயமாய் உழைப்பதற்குக் காந்தியடிகளுக்குச் சகல வசதியும் அளிக்கப்படும் என்று அரசாங்கத்தார் அறிவித்திருக்கின்றனர். இவ்விஷயமாய், தமது நண்பர்க[illegible]போக்கு வரவு வைத்துக்கொள்ளவும் [illegible] பேசவும் அவருக்கு உரிமையுண்டு.

1879

KALANILAYAM
Reg. No. M. 2324.

— கம்ப ராமாயணம் —

பதவுரை விரிவுரை விளக்கம் இலக்கணக் குறிப்பு முதலியவைகளுடன்

வை. மு. சடகோப ராமாநுஜாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார்.
ஆகியவர்களால் பதிப்பிக்கப் பெற்றவை.

பால காண்டம்	ரூ.	5	0	0
அயோத்தியா காண்டம்	,,	5	0	0
ஆரணிய காண்டம்	,,	4	0	0
கிட்கிந்தா காண்டம்	,,	4	8	0
சுந்தர காண்டம்	,,	5	0	0
யுத்த காண்டம்—2 பாகம்	,,	10	0	0

தபால், அல்லது இரயில் பார்ஸல் கட்டணங்கள் வேறு. வேண்டுவோர், தாம் வேண்டும் புத்தகங்களுக்குரிய விலையில் பாதியாவது முன்பணம் அனுப்பி ஆர்டர் செய்யவேண்டும். மற்றதை வி. பி. மூலம் பெற்றுக்கொள்வோம்.

மானேஜர் :— **கலா நிலயம், வேளாளர் வீதி, புரசை, சென்னை.**

:: அமிர்த சாகரம் ::

தேக பலத்தையும், ஞாபகவிருத்தியையும், பும்ஸத்வத்தையும், கொடுப்பதில் எங்கள்

அமிர்தார்ணவ லேகியம்

அமிர்தசாகரம் போன்றது. மேலும், நீடித்த தலைவலி, மண்டை இடி, மார்பு வலி, தேகச் சூடு முதலிய வியாதிகளைக் கரஸ்தமாகக் கண்டிக்கும். 20-தோலா லேகியம் கொண்ட டப்பி 1-க்கு ரூபா 2.

இனும்! ஆரோக்கிய கிரந்தம் இனும்!

கேட்போருக்கு இனமாகவும், தபாற்செல வில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

NATIONAL INSURANCE COMPANY, LIMITED.

Head Office :
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

New Policies Issued in 1931 for over	Rs. 1,32,33,000
Showing an increase over the New Business figure for 1930 of	16.54 %
Claims paid up to end of 1931 over	Rs. 90,00,000
Invested Funds amount to over	Rs. 1,75,00,000

LOW RATES — LIBERAL CONDITIONS
NEW TABLES — NEW BENEFITS

For particulars & Agencies please write to:—

R. G. DAS & Co., *Managers.* OR The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras.

FIRE & ACCIDENT RISKS
covered by
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

கற்பக மலர் (சிறு கதைகள்)

(ஆசிரியர் - சகோதரி வி. பாலம்மாள்)

மலர் 1 - விருந்தில் விலங்கு - விலை அணா 3.
மலர் 2 - அவள் இஷ்டம் - விலை அணா 3.
ஏழணா ஸ்டாம்புக்கு 2-புத்தகங்கள் அனுப்பப்படும்.
ஸ்ரீமதீ பிரசுராலயம், மயிலாப்பூர், சென்னை.

பாரத வசனம்.

ஆதிபர்வம் 3-8-0. ஸபா, ஆரண்ய, விராட பர்வங்கள் அடங்கியது ரூபா 5-0-0. உத்தியோக, பீஷ்ம, துரோண, கர்ண சல்லிய, ஸவுப்திக பர்வங்கள் அடங்கியது 5-0-0. சாந்தி, அநுசாசனிக, அச்வமேத, ஆச்ரமவாஸ, ஸ்வர்க்காரோஹண, முசல, மஹாப்ர ஸ்தானிக பர்வங்கள் அடங்கியது 5-0-0.

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை
வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)